வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 12.05.2022 வியாழக்கிழமை | இதழ் : 157 | பக்கங்கள் : 16

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கவேண்டும் அரசு!

## திருத்தந்தை பிரான்சிஸ் பகிரங்கக் கோரிக்கை



வத்திக்கான் சிற்றி, மே. 12


சமுதாய, மற்றும், பொருளாதாரச் சவால்களையும் பிரச்னைகளையும் எதிர்கொள்ளும் இலங்கைவாழ் மக்கள், தங்களின் கோரிக்கைகளை செவிமடுப்பதற்கு இலங்கை அரசு அமைதியான முறையில் செயல்படவேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு வித்துள்ளார்.

நேற்றுக் காலை வத்திக்கானின் புனித பேதுரு சதுக்கத்தில் வழங்கிய பொது மறையுரைக்குப் பின், இலங்கையில் போராடி வரும் பொதுமக்களை, குறிப்பாக

15

## இராணுவம் களம் இறக்கப்படுவதை அமெரிக்கா கூர்ந்து கவனிக்கிறது

### ராஜாங்கத் திணைக்களம் தெரிவிப்பு



வொஷிங்டன், மே.12

இலங்கையில் சட்டம் ஒழுங்கு பேணும் பணிக்கு இராணுவம் ஈடுபடுத்தப்படுவது குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

"அமைதி வழிகளில் எதிர்ப்பைத் தெரிவிப்போர் இராணுவத்தினால் அல்லது சிவிலியன் பிரிவின் தரப் பில் வன்முறை அல்லது அச்சுறுத்தலுக்கு ஆளாகக் கூடாது என்பதை நாங்கள் அடிக்கோடிட்டுக் காட்டுகிறோம்," என்று அமெரிக்க ராஜாங்க அமைச்

15

# புதிய பிரதமராகிறார் ரணில் விக்ரமசிங்க?

## இலங்கை அரசியலில் திடீர் திருப்பம்



கொழும்பு, மே. 12

**நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராக பதவியேற்கவுள்ளார்.**

ராஜபக்ஷ அரசுக்கு எதிரான நிலைப்பாடு நாட்டில் கடும் உச்சக் கட்டத்தில் உள்ள நிலையில்- பொருளாதார- அரசியல் நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் ஜனாதிபதி கோட்டா

15

## கொழும்பு வீதியெங்கும் இராணுவத்தினர் குவிப்பு!



கொழும்பு, மே. 12

கொழும்பில் நேற்று காலை முதல் வீதியெங்கும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்கு அமு

15

## தேவையற்று பொதுமக்கள் வெளியில் வரவேண்டாம்!

### இராணுவத் தளபதி வேண்டுகோள்

கொழும்பு, மே. 12

மக்களைத் தேவையற்ற வகையில் வெளியில் வரவேண்டாம் என்று பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா கேட்டுக்கொண்டுள்ளார்.

வன்முறையில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்த முப்

15

## ஊரடங்குச் சட்டம் இன்று காலை நீக்கம்

### மீண்டும் பிற்பகல் நடைமுறைக்கு

கொழும்பு, மே. 12

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 16 ஆவது பிரிவின் விதிமுறைகளுக்கு இணங்க நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 7 மணிக்கு தளர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

15

## இவ்வாரத்துக்குள் புதிய அரசு! '19' மீள அமுல்படுத்தப்படும்!!

### விசேட உரையில் ஜனாதிபதி உறுதி



கொழும்பு, மே. 12

" ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும் என பல தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். புதிய அரசை ஸ்தாபித்து, நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்திய பின்னர், இது சம்பந்தமாக பேச்சு நடத்தி, நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்."

-இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் முழுமையான உரை

15

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவு; ஹறின் பெர்னாண்டோ விலகல்!

கொழும்பு, மே. 12

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஹறின் பெர்னாண்டோ கட்சியில் இருந்து விலக தீர்மானித்துள்ளார்.

நேற்று மாலை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி கூட்டத்தில் கட்சியின் தலைவர் சஜித் பிரேம

11

## பாதுகாப்பு கருதி மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலை கடற்படை தளத்தில்!

### உறுதிப்படுத்தினார் பாதுகாப்பு செயலர்

கொழும்பு, மே. 12

பாதுகாப்பு காரணங்களுக்காக முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திருகோணமலை கடற்படை முகாமுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன உறுதிப்படுத்தியுள்ளார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக முன்னாள் பிரதமர் திருகோணமலை கப்பல் துறைக்கு அழைத்துச் செல்

15

## இப்படியும் நடக்கிறது...!

மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியபின்னர் நாட்டில் தற்காலி கமாகவேனும் ஒரு பெருமூச்சு விடக்கூடியதாக இருக்கும் என்றிருந்த நம்பிக்கையும் வீணாகிவிடும்போலவே, நடக்கின்ற சம்பவங்கள் இருக்கின்றன.

மஹிந்த பதவி விலகினால், பாராளுமன்றில் உறுப்பினர் களாக இருப்பவர்களில் ஒருவர் பிரதமராக முடியும், அவருக்கு பெரும்பான்மை ஆதரவு இல்லாவிட்டாலும்கூட ஒரு சில நாட்களுக்காவது அவர் பிரதமராக இருந்துவிட்டுப் போக லாம்.

மஹிந்த வீட்டுக்குப் போகவேண்டும் என்று குரல் எழுப்பி யவர்கள் எவரும் அந்த வெற்றிடத்தை நிரப்ப தயாராக இருப்ப தாகத் தெரியவில்லை.

பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஜேவிபியோ பதவியேற்பதில் மாத்திரம் ஒரு நியாயம் இருக் கும். மற்றையவர்கள் எல்லோருமே ஏதோ ஒருவகையில் மஹிந்த ஆட்சியுடன் தொடர்பு கொண்டவர்கள் அல்லது அதில் பங்குகொண்டவர்கள்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஒருவர் ஆட்சியமைப்பதே ஜனநாயக மரபுகளுக்கு உகந்தது.

சட்டத்தரணிகள் சங்கம் முன்வைத்த பதின்மூன்று அம்ச கோரிக்கைகளை அனைத்து தரப்பினரும் வரவேற்றனர். அந்த சங்கத்தினருடனான சந்திப்பில் ஜனாதிபதியும் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இணங்கினார் என்றும், அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ஒருவரை மேற்கோள் காட்டி சில செய்திகள் வெளிவந்திருந்தன.

அவர்கள் முன்வைத்த தீர்வுக்கான வழிப்பாதையை நகர்த்து வதற்கு முதல் தடையாக இருந்தது, பிரதமர் மஹிந்தவின் பதவி விலகலில் ஏற்பட்ட இழுபறி. அவர் பதவி விலகிய பின்னர், அதனை வழிநடாத்துவதில் சிக்கல்கள் இருக்காது என்றே நம்பப்பட்டது.

இப்போது, இடைக்கால அரசாங்கம் அமைக்கும் யோசனைக்கு சஜித் புதிய நிபந்தனை விதித்திருக்கின்றார்.

ஜனாதிபதி பதவி விலகினால் மாத்திரமே, தான் இடைக் கால பிரதமராக பதவியேற்கமுடியும் என்று அவர் திட்ட வட்டமாக தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளிவந் திருக்கின்றன.

இவர் கோருவதுபோல ஜனாதிபதி பதவி விலகினால், உடனடியாக என்ன நடக்கும்? நமது அரசியலமைப்பின்படி பிரதமரர் தற்காலிக ஜனாதிபதியாக பதவியேற்கவேண்வரும். இந்த ஜனாதிபதியின் பதவிக்காலம் முழுவதும் கூட அவர் பதவியில் தொடரலாம்.

ஆனால் இப்போதோ, நாட்டில் பிரதமர் என்ற ஒருவரே இல்லாதபோது ஜனாதிபதி பதவி விலகினால் சபாநாயகரே அடுத்து ஜனாதிபதியாக பதவியேற்க வேண்டும். அதுவே நமது அரசியலமைப்பு சொல்கின்ற விடயம்.

ஜனாதிபதி பதவி விலகினால் மாத்திரமே இடைக்கால பிரதமர் பதவியை தான் ஏற்கமுடியும் என்று சஜித் அடம் பிடிப்பது எதற்காக என்பது அவருக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி.

ஜனாதிபதி பதவி விலகிய பின்னர்தான் தான் பிரதமராக பதவியேற்பேன் என்றால், அவர் மஹிந்த யாப்பா அபயவர்த் தன என்ற ஜனாதிபதி முன்னிலையில்தான் பதவியேற்க வேண்டும்.

அதனால்தான், எதிர்க்கட்சிகளின் சட்டமா அதிபர் என்று வர்ணிக்கப்படும் கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன், ஜனாதிபதி உடனடியாக பிரதமர் மற்றும் அமைச்சரவையை பதவிப்பிர மாணம் செய்து, அதன் பின்னர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்.

ஆக, தான் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்தால், அதன் பின்னர் ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்றால், சஜித் உடனடியாகவே ஜனாதிபதியாக பதவியேற்க முடியும். ஆனால் அவரோ, தான் பிரதமராக பதவியேற்பதெனில் அதற்கு முன்னதாக ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருப்பது ஆச்சரியமானதாக இருக்கின்றது.

பாராளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்கின்ற ஒருவரை பிரதமராக நியமிக்க தயாராக இருப்பதாக சொன்ன ஜனாதிபதி, இப்போது அவ்வாறு பெரும்பான்மை இல்லை யெனிலும் பதவியை வழங்க தயாராக இருக்கின்றார். அது மாத்திரமன்றி, அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்தை ரத்துச் செய்து, பிரதமருக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் பத்தொன்பதாவது திருத்தத்தை உட்படுத்திய இருபத்தியோ ராவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்கும் தயாராக இருக்கின்றார்.

இதைவிட, முற்றாக நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான சர்வஜனவாக்கெடுப்பை நடாத்துவதற்கான எற்பாடுகளைச் செய்வதாகவும் அவர் சட்டத்தரணிகள் சங்கத் தினருடனான சந்திப்பில் தெரிவித்ததாக அறியமுடிகிறது.

நாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக இல்லாமல் செய்வதெனில் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்தவேண்டியிருக்கும். அதற்காகன சூழல் இப்போது வந்திருக்கின்றது. எனவே, அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, நாட்டில் நிரந்தரமான மாற்றத்திற்கான அத்திவாரத்தை இட அனைவரும் தயாராக வேண்டும்.

தாமதிக்கின்ற ஒவ்வொரு கணமும், நாடு மேலும்மேலும் கீழ்நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது.

- ஊர்க்குருவி

# யாழ். மாவட்ட பொருள் விநியோகம் எந்தப் பாதிப்புக்களும் ஏற்படவில்லை!

## மொத்த விற்பனையாளர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 12

**யாழ். மாவட்டத்துக்கான உணவு உள் ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விநியோ கத்தில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று யாழ்ப்பாண மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

உணவு பொருள் விநியோ த்தில் ஒரு வாரம் தடங்கல் ஏற்படுமென யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் வெளியிட்ட தகவல் தவறானது என்றும், இந்த தகவலால் பொதுமக்கள் பதற்றமடைய வேண்டாமென் றும் தெரிவித்துள்ளனர்.

ஊரடங்கு மற்றும் தென்னி லங்கை கொந்தளிப்பான நிலவரங்களினால் கொழும் பிலிருந்து யாழ் மாவட்டத் துக்குப் பொருட்களை கொண்டு வருவதில் ஒரு வார தடங்கல் ஏற்படலாமென யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் நேற்றுமுன்தினம் எச்சரித்திருந்தார். இதனால் பொதுமக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டதுடன், பொருட்களை கொள்வனவு செய்வதில் தீவிரம் காட்டினார்கள்.

எனினும், அரச அதிபரின் தகவல் தவறானது என்றும், பொருள் விநியோகம் சீராக நடந்து வருவதாகவும் மொத்த விற்பனையாளர்கள் தெரிவித் துள்ளனர்.

மேலும், "யாழ். மாவட்டத் துக்கான பொருள் விநியோகத் தில் ஒரு வார தடங்கல் ஏற்படு மென அரசாங்க அதிபர் எச்ச ரித்திருந்தார். இதனால் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள் ளதை அவதானிக்கிறோம். எனினும், பொதுமக்கள் அச் சமடைய வேண்டியதில்லை. யாழ்ப்பாணத்துக்கான பொருள் விநியோகம் சீராக நடந்து வருகிறது. நேற்றும் (நேற்று முன்தினமும்), இன்றும் (நேற்றும்) கொழும்பிலிருந்து பொருட்களை ஏற்றியபடி பாரவூர்திகள் யாழ்ப்பாணம் வந்துள்ளன.

கொழும்பில் கொள்வனவு செய்யக்கூடிய அனைத்து பொருட்களும் சீராக யாழ்ப்பா ணத்துக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இன்று (நேற்று) காலையில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பாரவூர்திகள், 3 இடங் களில் போராட்டக்காரர்களால் வழிமறிக்கப்பட்டு பரிசோதிக் கப்பட்டன. யாழ்ப்பாணத்துக் கான பொருள் விநியோகம் என் றதும் எந்த தடங்கலும் ஏற்ப டுத்தாமல் பயணத்தை தொடர வசதி செய்தனர்.

நிலைமை இப்படியிருக்க, பொருள் விநியோகம் ஒரு வாரம் பாதிக்கப்படுமென அரசாங்க அதிபர் தெரிவித்த கருத்து எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி யது. மக்கள் மத்தியில் பதற் றத்தை ஏற்படுத்தி பொருள் கொள்வனவுக்கு முண்டியடிப் பதை அவதானிக்கிறோம். பொருள் விநியோகம் சீராக இடம்பெறுவதால் மக்கள் பதற் றமடைய வேண்டாம்' என தெரிவித்தனர்.

(ஐ)



## சுகாதார உத்தியோகத்தர்கள் கறுப்பு பட்டி அணிந்து கடமை!

கொழும்பு, மே 12

அமைதிப் போராட்டத்தில் கலவரத்தை ஏற்படுத்திய மையை கண்டித்து அனைத்து சுகாதார உத்தியோகத்தர் களும் கறுப்புப் பட்டி அணிந்து கடமையில் ஈடுபட்டனர்.

அமைதியான போராட்டத்திற்கு எதிரான அரசாங்கத் தின் நடவடிக்கைகளை வன்மையாக கண்டிப்பதாக அர சாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நேற்று அனைத்து சுகாதார பணியா ளர்களும் கறுப்புப் பட்டி அணிந்து கடமையில் ஈடுபட் டனர். அத்துடன் தொடர்ந்தும் இந்த நடவடிக்கை முன் னெடுக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ)


## இலங்கையில் அமைதி வேண்டி இந்திய சிற்ப கலைஞரின் முயற்சி!

சென்னை, மே 12

இந்தியாவின் பிரபல மணல் சிற்பக் கலைஞரான சுதர்சன் பட்நாயக் என்பவர் இலங்கையில் சமாதானத்தை வலியுறுத்தி மணலில் ஓவியம் ஒன்றை செதுக்கியுள்ளார்.

குறித்த மணல் ஓவியம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

குறித்த மணல் சிற்பதை சுதர்சன் பட்நாயக் இந்தியாவின் பூரி கடற்கரை பகுதியில் செதுக்கியுள்ளார். (ஐ)




# மூன்று அமைச்சுகளுக்கு மீண்டும் பழைய செயலர்கள்!

கொழும்பு, மே 12

பாதுகாப்பு, நிதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு ஆகிய அமைச்சுக்களின் செயலாளர் களை மீண்டும் அதே பதவிகளுக் காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

பிரதமர் பதவி விலகியதன் பின்னர், அமைச்சரவை கலை வதால் அமைச்சுக்களின் செயலாளர்களின் பதவிகளும் செயலிழக்கும்.

இந்தநிலையில், நாட்டின் செயற்பாடுகளை முன்னெடுத் துச் செல்வதற்காக குறித்த 3 அமைச்சுக்களின் செயலாளர்க ளையும் தொடர்ந்தும் தக்க வைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்படி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வுப் பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவும், பொதுமக் கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வுப்பெற்ற மேஜர் ஜெனரல் ஜகத் டி அல்விஸூம், நிதியமைச்சின் செயலாளராக மஹிந்த சிறிவர்த் தனவும் தொடர்ந்தும் செயல் படவுள்ளனர்.

ஈழநாடு
Eelanadu
12.05.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# நந்தலால் வீரசிங்கவின் எச்சரிக்கை?

இலங்கையின் அரசியல் வரலாற்றில் எவரும் எதிர்கொள்ளாத நெருக்கடிகளை, ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ எதிர்கொண்டு வருகின்றார். நந்தசேன கோட்டபாய ராஜபக்ஷ, தொடர்பில் முன்னரோ, ஓர் அச்சம் கலந்த மரியாதையொன்று சிங்களவர்கள் மத்தியிலிருந்தது. ஆனால் இப்போது அனைத்தும் தலைகீழாகிவிட்டது.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதிக்கு இரண்டு வார காலக்கெடு வழங்கியிருக்கின்றார். இரண்டு வாரங்களுக்குள், அரசியல் முரண்பாடுகளை போக்கி, ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை உருவாக்காது போனால், தான் பதவியிலிருந்து விலகவுள்ளதாக, அவர் தெரிவித்திருக்கின்றார். ஏனெனில், நாடு அரசியல் முரண்பாட்டுக்குள் சிக்குமானால், பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரிக்கும் - நிலைமைகளை சமாளிக்க முடியாமல் போகுமென்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில், மத்திய வங்கியின் ஆளுநர் ஒருவர், ஜனாதிபதிக்கு எச்சரிக்கைவிடுப்பது இதுவே முதல்தடவையாகும். அந்தளவிற்கு நிலைமை பாரதூரமாக சீர்கெட்டிருக்கின்றது. மத்திய வங்கியின் ஆளுநர் சுயாதீனமாக இயங்கினால் மட்டும்தான், அவரால் நாட்டின் பொருளாதார நிலைமையை சீர்செய்வதற்காக செயலாற்ற முடியும். அதற்கு ஸ்திரமானதொரு அரசாங்கம் தேவை. இந்த நிலையில் தான், அவர் இவ்வாறானதொரு எச்சரிக்கையை விடுத்திருக்கின்றார்.

கொரோனா பெருந்தொற்றிற்கு பின்னர், பல்வேறு நாடுகளும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருந்தது. இலங்கையும் இதில் ஒன்று. ஆனால் இலங்கை போன்று, ஏனைய நாடுகள் வங்குரோத்து நிலைக்கு செல்லவில்லை. ஏனெனில், அந்த நாடுகளிலும் அனைத்து அரசியல்வாதிகளும் நேர்மையாகவும், ஒழுக்கமாகவும்தான் இருந்தனர் என்றில்லை. அங்கும் பிரச்சினைகள் இருந்தன - அரசியல் முரண்பாடுகள் இருந்தன. ஆனாலும் அவர்கள் வங்குரோத்து நிலைமைக்கு செல்லவில்லை. ஆனால் இலங்கை மட்டும் இதில் எவ்வாறு விதிவிலக்கானது?

ஆரம்பத்திலிருந்தே, நிலைமைகளை எவ்வாறு சமாளிப்பது என்பதை விடவும், பிரச்னைகளை எவ்வாறு தற்காலிகமாக பூசிமெழுகுவது என்பதிலேயே, ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தினர். அண்ணனிற்கு பதிலளிப்பது, தம்பிக்கு பதிலளிப்பது, மகனுக்கு பதிலளிப்பது - என்னுமடிப்படையிலேயே, ராஜபக்ஷக்களின் நிர்வாகம் அமைந்திருந்தது. அதன் விளைவையே தற்போது நாடு மோசமானதொரு சூழலுக்குள் சிக்குற வேண்டியேற்பட்டது. இறுதியில் வன்முறையை தூண்டிவிடுவதன் மூலம் அதிகாரத்தை தக்கவைக்கும் கடைநிலை அரசியலிலேயே, மஹிந்த ராஜபக்ஷ தஞ்சமடைந்தார். குறுகிய இனவாத அரசியலில் மூலம், அரசியலை நிரந்தரமாக நிர்வகிக்கலாம் என்னுமடிப்படையிலேயே, ராஜபகஷக்கள் செயற்பட்டனர். இதன், விளைவாகவே நாடு மோசமானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது.

ஒருபுறம் ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரி தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. பிறிதொரு புறம் நாட்டின் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கான எந்தவொரு மார்க்கமும் தெளிவாக இல்லை. மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியிருக்கும் நிலையில், புதிய பிரதமர் ஒருவரை நியமிக்க முடியவில்லை.

ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை உருவாக்காது விட்டால், தான் பதவிலிருந்து விலகவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் எச்சரிக்குமளவிற்கே நிலைமைகள் இருக்கின்றன. மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர், தனது கல்வியிலும், தனது தனிப்பட்ட மதிப்பிலும் அக்கறை கொண்டிருக்கின்றார். வெறும் பதவியை அவர் அலங்கரிக்க விரும்பவில்லை.

# ‘கோணமாமலை அமர்ந்தாரே’!

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கையின் அரசியல் வரலாற்றில் நாட்டு மக்களின் ஆக்ரோஷமான எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்ட பிரதம மந்திரியாக மஹிந்த ராஜபக்ஷ திருகோண மலை கடற்படை தளத்தை அண்டிய சோபர் தீவில் தமது மனைவியார் ஷிராந்தி உட்பட நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் சகிதம் தஞ்சமடைந்துள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையின் இந்து மக்களைப்பொறுத்தவரை திருகோணமலையின் திருக்கோணேஸ்வரம் திருத்தலம் மிகவும் பிரபலமிக்க ஒரு வழிபாட்டுத்தலமாகவே இருக்கின்றது.

கி.பி 7-ம் நூற்றாண்டில் இந்தியாவின் தமிழகத்திலுள்ள சீர்காழியில் பிறந்த திருஞானசம்பந்தரால் இலங்கையில் பாடல் பெற்ற திருத்தலங்களாக தலைமன்னாரில் அமைந்துள்ள திருக்கேதீஸ்வரம், திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம் ஆகியவை விளங்குகின்றன.

திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயம் மிகவும் ரம்மியமான கடல் சூழ்ந்த மலைக்குன்றில் அமைந்துள்ளது.

பிரிட்டிஷார் இலங்கையை ஆட்சி செய்த போது கிழக்கே இருந்து நாட்டின் பாதுகாப்புக்கு கடல் மற்றும் ஆகாய மார்க்கமாக ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை சமாளிக்கும் விதத்திலேயே திருகோணமலையின் சீனன் குடாவில் விமானப்படைத்தளத்தையும் பின்னர் அதனை அண்டியதாக கடற்படைத் தளத்தையும் அமைத்திருந்தனர்.

தற்போது கொழும்பில் மூன்று தினங்களுக்கு முன்னர் வெடித்த தமக்கெதிரான மக்களின் கொந்தளிப்பையடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலை கடற்படைத்தளத்தில் அதியுயர் பாதுகாப்பின் நிமித்தம் தமது குடும்பம்தவர் சகிதம் தஞ்சமடைந்துள்ளார் என்பதை பாதுகாப்பு துறையினர் ஊர்ஜிதப்படுத்தியுள்ளனர்.

திருகோணமலை கடற்படைத்தளத்தையண்டிய சோபர் தீவிலேயே பிரதமர் ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

எனவே முன்பொருகாலத்தில் தமக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவராக இருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தற்போது ஒரு தேடப்பட்டுவரும் குற்றவாளியைப்போல திருகோணமலை கடற்படைத்தளத்தை அண்டிய சோபர் தீவில் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திருகோணமலையில் தஞ்சமடைந்துள்ளதை நோக்கும் போது திருஞானசம்பந்த நாயனார் திருக்கோணேஸ்வரம் குறித்து பாடிய படல்களில் வருகின்ற ‘கோணமாமலை அமர்ந்தாரே’ என்ற இறுதி வரியையே வேடிக்கையோடு நினைவு கூரவேண்டியுள்ளது.

இருதடவைகள் நாட்டின் ஜனாதிபதியாகவும் இருந்த மஹிந்த ராஜபக்ஷ எவருமே வெற்றி கொள்ள முடியாதிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளை தாம் வெற்றி கொண்டவர் என்று மார்தட்டியதோடு தமது அரசியல் செல்வாக்கின் மூலம் எவ்வித அரசியல் அறிவுமில்லாதிருந்த தமது சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டின் ஜனாதிபதியாக்குமளவுக்கு மக்களின் ஆதரவை திரட்டியுமிருந்தார்.



ஆனால் தற்போது நாட்டு மககளால் ஒரு ‘செல்லாக்காசாக’ மதிக்கப்படுமளவிற்கு நாட்டைவிட்டு தப்பிச்செல்ல முடியாத குறையாக திருகேணமலை கடற்படையினரின் தயவோடு அங்குள்ள சோபர் தீவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதுங்கியுள்ளதையே அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

கொழும்பிலும் நாட்டின் பல்வேறு இடங்களிலும் கடந்த சிலதினங்களாக இடம்பெற்ற வன்முறைகளினால் ஏற்பட்ட உயிர், உடமைகளுக்கான சேதங்கள் குறித்த விவரங்கள் பாதுகாப்புச்செயலாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

வன்முறைகள் காரணமாக இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட ஒன்பது பேர் கடந்த சில தினங்களில் உயிரிழந்துள்ளனர். வாகனங்கள் எரித்து தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை 41 ஆக காணப்படுகின்றது.

இதுதவிர வாகனங்கள் சேதமாக்கப்பட்ட சம்பவங்கள் 61 ஆக காணப்படுகின்றது. வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்ற அசையா சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் 136 ஆக இருக்கின்றது. வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்றவையாவும் இன்றைய அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களது உடமைகளாகவே இருக்கின்றன. அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மொத்தம் பதினாறு பேரின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் என்பவை எரித்தும் , இடித்து தரைமட்டமாக்கப்பட்டுமுள்ளன.

எனவே பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமல்ல. அவரது அமைச்சரவையிலுள்ள பல முக்கிய உறுப்பினர்களது சொத்துக்கள் உடமைகளும் நாசமாக்கப்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்டோர் நாட்டு மக்களுக்கு அஞ்சி தலைமறைவாகியுள்ளனர் என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் இன்றைய அரசின் கதாநாயர்களான ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேணைகளை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தவேளையிலேயே நாட்டுமக்களால் நம்பத்தகாதவர் என்ற நிலைக்குள்ளாகியுள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அதேவேளை காலிமுகத்திடல் ‘கோட்டா கோ கம’ ஆர்பாட்டம் தற்சமயம் 34 நாட்களையும் கடந்துள்ள நிலையில் அடுத்து மக்களால் இலக்கு வைக்கப்பட இருப்பவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷ என்பதையே அனுமானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 12 புதன்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 29
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : ஏகாதசி




**மேடம்**
எதிர்பார்த்த செயல் ஒன்று இழுபறியாக இருக்கும். யோசித்து செயல்படவும். அரசு வழியிலான பணியிட முயற்சி உங்களுக்கு முன்னேற்றத்தை காண்பிக்கும்.

**இடபம்**
அரசு வழியில் அதிருப்தி உண்டாகலாம், எச்சரிக்கை தேவை. அலைச்சல் அதிகரிக்கும். ஆரோக்யத்தில் கவனம் தேவை. எதிரிகளால் ஏற்பட்ட பிரச்னை விலகி நிம்மதியுடன் செயல்படு வீர்கள்

**மிதுனம்**
உங்களது கடின உழைப்பால் வெற்றி காண்பீர்கள். யோகமான நாள். தொழிலில் ஏற்பட்ட நெருக்கடி விலகி நன்மை ஏற்படும். எதிர்பார்த்த தொகை கைக்கு வந்து சேரும் உற்சாகமான நாள்.

**கடகம்**
பேச்சில் கவனம் தேவை. குடும்பத்தில் சிறு, சிறு பிரச்னை தோன்றி மறையும். உத்தியோகத்தில் நெருக்கடியை சந்திப்பீர்கள். விழிப்புணர்வு அவசியம். வியாபாரத்தில் முழுக்கவனம் செலுத்துவீர்கள்,

**சிம்மம்**
நினைத்தது நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். அரசு வழியிலான எதிர்பார்ப்பு நிறைவேறும். கடவுளுக்கு நன்றி செலுத்துவீர்கள். உடல் நிலையில் இருந்த சங்கடம் விலகும்.

**கன்னி**
திடீர் சுபச்செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. முயற்சி இழுபறியாகும். நினைத்த செயல் தள்ளிப்போகும் நாள். புதிய செயல்களில் விரயம் உண்டாகும். யோசித்து செயல்படவும்.

**துலாம்**
இன்று நினைத்த காரியங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனம் ஒருமுகப்படும். நினைத்த செயல் நிறைவேறும். உங்களுக்கு வரவேண்டிய தொகை கைக்கு வந்து சேரும்.

**விருட்சிகம்**
குடும்பத்தின் முன்னேற்றத்திற்குரிய முயற்சி இன்று பலிதமாகும். வேலையில் இருந்த நெருக்கடி விலகும். நிம்மதி கூடும். சில சொத்துகள் வழியே உண்டான சிக்கல் முடிவிற்கு வரும்.

**தனுசு**
முயற்சியில் தடை, தாமதம் ஏற்பட்டு அலைச்சலை சந்திப்பீர்கள். எதிர்பார்த்த செயல் இழுபறியாகி மனம் சோர்வடையும். உறவினர் ஒருவரால் நன்மை ஏற்படும். மகிழ்ச்சி காணும் நாள்.

**மகரம்**
அலைச்சல் அதிகரிக்கும். தொழிலில் நெருக்கடி உண்டாகும். தேவையற்ற குழப்பங்களால் வீண் பிரச்னை உண்டாகலாம். உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் சங்கடத்தை சந்திப்பீர்கள்.

**கும்பம்**
புதிய முயற்சி பலிதமாகும். எதிர்பார்த்தவற்றில் லாபம் உண்டாகும். தம்பதிகள் இடையே உண்டான பிரச்னை தீர்ந்து ஒற்றுமை காண்பீர்கள். நண்பர்கள் உதவியுடன் நினைத்ததை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் ஒருவருக்கு திருமணப்பேச்சு பலிதமாகும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து யோசிப்பீர்கள். நட்பு வட்டம் விரியும். வீடு,மனை வாங்கும் முயற்சி பலிக்கும். அதிர்ஷ்டகரமான நாள்.

# இலங்கை வன்முறை எதிரொலி தமிழகத்தில் பாதுகாப்பு தீவிரம்!

சென்னை, மே 12

தமிழக கடலோரப் பகுதிகளில் தீவிர கண்காணிப்பை மேற்கொள்ள பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியை எதிர்த்து பொதுமக்கள் நடத்தி வந்த போராட்டம் வன்முறையாக வெடித்தது. இதனால், நாடு முழுவதும் அசாதாரண சூழல் நிலவி வருகின்றது.

இதனிடையே, இலங்கையில் சிறைச்சாலையிலிருந்து கைதிகளை ஏற்றிச் சென்ற பேருந்தின்மீது போராட்டக்காரர்கள் தாக்கியதில், அதிலிருந்த 48 சிறைக் கைதிகள் தப்பிச் சென்றனர்.

இந்நிலையில், தப்பிச் சென்ற சிறைக் கைதிகள் மற்றும் தேச விரோதிகள் கடல் வழியாக தமிழகத்துக்குள் ஊடுருவ வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனால், தமிழகத்தில் உள்ள அனைத்து கடலோர மாவட்டங்களிலும் கண்காணிப்பை தீவிரப்படுத்த மத்திய உள்துறை அமைச்சு எச்சரித்துள்ளது.

தொடர்ந்து, இராமேஸ்வரம் உள்ளிட்ட கடற்பகுதிகளில் கடலோரக் காவல்படையினர் தீவிர ரோந்து பணியை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தமிழீழ மக்களின் சாபத்தாலேயே இலங்கையே தீப்பற்றி எரிகிறது!

## விஜயகாந்த் அறிக்கை

சென்னை, மே 12

இனப்படுகொலை செய்யப்பட்ட போது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரின் வயிறு எப்படி எரிந்ததோ, அந்த சாபம்தான் இன்றைக்கு இலங்கையே தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இனப்படுகொலை செய்த பாவத்திற்கு ராஜபக்ஷ மிகப் பெரிய தண்டனையை அனுபவித்து வருகிறார் என்று தேசிய முற்போக்கு திராவிடர் கழகத் (தே. மு. தி. க.) தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் வன்முறை வெடித்துள்ள நிலையில் பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்துள்ளார். ஓர் இனத்துக்காக போராடிய விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இரக்கமற்ற முறையில் கொலை செய்து, அத்தனை மக்களையும் கொலை, கொள்ளை, பலாத்காரம் செய்து மிக கொடூரமாக நடந்து கொண்ட ராஜபக்ஷவுக்கு கிடைத்த மிகப் பெரிய தண்டனை. செய்த பாவத்திற்கு ராஜபக்ஷ தண்டனையை அனுபவித்து வருகிறார்.

இனப்படுகொலை செய்யப்பட்ட போது தமிழீழ மக்கள் ஒவ்வொருவரின் வயிறு எப்படி எரிந்ததோ, அந்த சாபம்தான் இன்றைக்கு இலங்கையே தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. செய்த கொடுமைகளுக்ாகவும் அப்பாவி தமிழர்களை கொன்றமைக்காகவும் ராஜபக்ஷ குடும்பத்துக்குக் கிடைத்த தண்டனையாகதான் இது பார்க்கப்படுகிறது. இன்றைக்குதான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், அவருடன் இறந்த அனைத்து தமிழீழ மக்களின் ஆன்மா சாந்தி அடைந்திருக்கும். எனவே, அந்த மக்களை இன்று நாம் நினைத்து அவர்களுக்காக பிரார்த்தனை செய்வோம் - என்றுள்ளது. (ஐ)



# பிரபாரகர தமிழனின் வீரம் எங்கே? நாடு கடக்க துணியும் ராஜபக்ஷ எங்கே?

## வைரமுத்து ருவிட்டரில் கேள்வி


சென்னை, மே 12

நான்கு பக்கமும் மரணம் சூழ்ந்த போதும் தாயகம் பிரியேன் என்ற பிரபாகரனின் பேராண்மை எங்கே என்று கவிஞர் வைரமுத்து கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அரச தரப்பினரின் சொத்துக்கள் அழிக்கப்படுகின்றன. இந்த நிலையில், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல முயல்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் கவிப் பேரரசு வைரமுத்து தனது ருவிட்டர் பக்கத்தில் கவிதை வடிவில் ருவிட்டர் பதிவை இட்டுள்ளார்.

அதில், “நான்கு பக்கம் மரணம் சூழ்ந்தபோதும் “தாயகம் பிரியேன் தாய் மண்ணில் மரிப்பேன்“ என்ற பிரபாகரத் தமிழனின் பேராண்மை எங்கே...? ஊர் கொந்தளித்த ஒரே மாதத்தில் நாடு கடக்கத் துடிக்கும் ராஜபக்ஷ எங்கே... ஓ சர்வதேச சமூகமே! இப்போதேனும் தமிழன் வீரத்திற்குத் தலைவணங்கு”, என்று அவர் பதிவிட்டுள்ளார். (ஐ)




# இலங்கைக்கு அரிசி கொள்வனவு தமிழகத்தில் திடீர் விலையுயர்வு!

சென்னை, மே 12

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு அனுப்ப, 4 கோடி கிலோ அரிசியை, தமிழக அரசு கொள்முதல் செய்ய ஆரம்பித்த தன் எதிரொலியாக, தமிழகத்தில் அரிசி கிலோவுக்கு, 4 - 8 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள மக்களுக்கு வழங்க நான்கு கோடி கிலோ அரிசிக்கான கொள்முதலை தமிழக அரசாங்கம் தொடங்கியது. இதனால், நடுத்தர மக்கள் அதிகம் பயன்படுத்தும் அரிசி வகைகளை தமிழக அரசு அதிகம் கொள்வனவு செய்கிறது.

இதனால், சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாடு உருவாகும் சூழ்நிலை ஏற்படுவதால், அவற்றின் விலை, கிலோவுக்கு, 4 - 8 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இந்த திடீர் விலை உயர்வு நடுத்தர மக்கள் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

# பிலப்பிட்டிய பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவர் கொலை

## உடைமைகளும் கொள்ளை

கொழும்பு, மே 12

கொள்ளுவத்தை - பிலப்பிட்டிய பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் அவரது உடைமைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த நபர் உறங்கிக்கொண்டிருந்தபோது வீட்டினுள் நுழைந்த நபரொருவர் இந்தக் கொலையை மேற் கொண்டதுடன், அங்கிருந்த உடைமைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த வர்த்தகர் 69 வயதுடைய ஒருவரென பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நான்கு மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, மே 12

அடை மழையால் நுவரெலியா உட்பட 4 மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளுக்கு மண்சரிவு அபாயம் விடுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

பலத்த மழை பெய்யும் சந்தர்ப்பங்களில், மலைப்பாங்கான பகுதிகளில் வசிக்கும் மக்களை எச்சரிக்கையுடன் செயற்படுமாறும் தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் கேட்டுள்ளது. (அ)

# கோட்டா பதவியில் இருக்கும்வரை இடைக்கால அரசுக்கு ஆதரவில்லை

## அநுரகுமார திஸாநாயக்க திட்டவட்டம்

**கொழும்பு, மே12**

**“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடைக்கால அரசமைப்பதால் பயன் ஏற்படாது. அவரால் நாட்டை கட்டியெழுப்பவும் முடியாது. எனவே, கோட்டாபய ராஜபக்ஷவும் பதவி விலகவேண்டும்.” - என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ராஜபக்ஷ குடும்பம் அதிகார போதையில் மயங்கியுள்ளது. மஹிந்த உள்ளிட்ட குழுவினரே வன்முறைக்கு வழிவகுத்தனர். ஆதரவாளர்கள் எதற்காக அழைக்கப்பட்டனர் என்பதை மஹிந்த ராஜபக்ஷ தமதுரையில் தெளிவுபடுத்தவில்லை. மோதத் தயார் என்ற தகவலையே அவர் வழங்கினார். எனவே, நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களுக்கான பொறுப்பை மஹிந்த ராஜபக்ஷ பொறுப்பை ஏற்கவேண்டும். மக்களின் நியாயமான போராட்



டங்களை ஆளுங்கட்சியினரே வன்முறையாக மாற்றினர்.

சில ஆயுதங்கள் வெளியில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன. சில ஆயுதங்கள் அலரி மாளிகையில் வழங்கப்பட்டுள்ளன. எனவே, இது திட்டமிட்ட அடிப்படையிலான தாக்குதலாகும். வன்முறையாளர்கள் காலிமுகத்திடல் செல்வதை பொலிஸார் தடுத்து நிறுத்தவில்லை. போராட்டக்காரர்களை நோக்கியே கண்ணீர்ப் புகைகூட வீசப்பட்டுள்ளது. இதற்கு பொலிஸ்மா அதி பரும் பொறுப்புக்கூற வேண்டும்.

ஜனாதிபதியால் நாட்டை ஆளமுடியாது. அவரை வைத்துக்கொண்டு இடைக்கால அரசு அமைப்பதிலும் பயன் இல்லை. எனவே, அவரும் பதவி விலகவேண்டும். சம்பவத்துக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# மக்களைப் பாதிக்கும் வகையில் மின்வெட்டு மேற்கொள்ளப்படாது

## மின்சார சபை பொறியியலாளர் சங்கம்

கொழும்பு, மே 12

பாதிக்கப்பட்ட மக்களை ஒடுக்கும் வகையில் மின்வெட்டு மேற்கொள்ளப்படாது என இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மின் இணைப்பை துண்டித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக சமூக வலைத்தளங்களில் பரவி வரும் வதந்திகள் உண்மைக்குப் புறம்பானது என்று அதன் தலைவர் அனில் ரஞ்சித் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் மின் இணைப்பை துண்டிக்கும் எண்ணம் எப்பொழுதும் எமக்கு இருந்ததில்லை. நாம் அனைவரும் வெளியேறினால் நிச்சயமாக மின்சாரம் துண்டிக்கப்படும். ஆனால் அத்தகைய செயலை நாம் செய்யப்போவதில்லை. ஏனெனில் இந்த நேரத்தில் மின்சாரத்தை பராமரிப்பது மிகவும் முக்கியமாகும். ஏனென்றால் எவராலும் போன் ஒன்றை சார்ஜ் செய்யவோ, பேசவோ, எதையும் செய்யவோ முடியாது போகும். அதனால்தான், எக்காரணம் கொண்டும் மின்வெட்டை அனுமதிக்கமாட்டோம் என்று தெளிவாகக் கூறுகிறோம்-என்றார். (அ)

# வன்முறை நீடிக்குமானால் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும்!

## எச்சரிக்கிறார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, மே 12

“நாட்டில் அவசரகால சட்டம் அமுலில் உள்ளது. ஊரடங்கு சட்டமும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றை பொருட்படுத்தாமல் - சட்டத்துக்கு கட்டுப்படாமல் வன்முறை முன்னெடுக்கப்படுகின்றது. இந்நிலை நீடித்தால் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த வேண்டிய நிலை பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினருக்கு ஏற்படும்.”

-இவ்வாறு பாதுகாப்பு செயலாளர் கமல் குணவரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட மோதல்களால் நேற்றுமுன்தினம் மாலைவரை இரு பொலிஸ் அதிகாரிகள் உட்பட 8 பேர் உயிரிழந்துள்ளனர். வீடுகளுக்கு தீ வைப்பு மற்றும் சொத்துகளுக்கு தேசம் விளைவிக்கும் 104



சம்பவங்கள் பதிவாகியுள்ளன. 60 வாகனங்கள் கொளுத்தப்பட்டுள்ளன. 40 வாகனங்களுக்கு தேசம் விளைவிக்கப்பட்டுள்ளன என சேத விவரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

ஜனநாயக வழியில் போராடுங்கள். எவரும் வன்முறையில் ஈடுபடவேண்டாம். சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கவேண்டாம். எமது மக்களையே கொல்லவேண்டாம். அவ்வாறு செய்வது தவறு. சட்டத்தை கையில் எடுத்து, வன்முறையில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் என்பன அமுலில் உள்ள நிலையில்கூட சிலர் வன்முறையில் ஈடுபடுகின்றனர். அதனை பயன்படுத்தி மேலும் சிலர் சூறையாடுகின்றனர். இந்நிலைமை நீடிக்கக்கூடாது, அதற்கு முற்றுபுள்ளி வைக்கவேண்டும். ஆகவே பாதுகாப்புத் தரப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பாதுகாப்பு செயலாளர் கோரிக்கை விடுத்தார்.

அவ்வாறு இல்லாவிட்டால் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த நேரிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார். (அ)

# சிங்கள மக்களுடன் நல்லிணக்கத்தை வலுப்படுத்தினால் பிரச்னைகள் தீரும்

## கூறுகிறார் டக்ளஸ் தேவானந்தா

கொழும்பு, மே 12

தென்னிலங்கையில் வாழ்ந்து வருகின்ற சிங்கள மக்களுடன் தேசிய நல்லிணக்கத்தினையும் நல்லுறவையும் வலுப்படுத்துவதன் மூலமே, பிரச்னைகளை தீர்க்க முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில்-

உங்களின் உணர்வுகளையும் அதில் இருக்கின்ற நியாயங்களையும் நாங்கள் புரிந்து கொள்கின்றோம். அதற்கு மதிப்பளிக்கின்றோம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்கள் தீர்க்கப்படவேண்டும். மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசெகரியங்கள் களையப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவும் இருகின்றது.

ஆனால் எத்தகைய பிரச்னைகளையும் வன்முறைகளுக்கூடாக தீர்க்க முடியாது என்பதை நீண்ட காலமாகவே வலியுறுத்தி வருகின்றவர்கள் நாம்.

இதன் காரணமாக புலிகள் எம்மில் பலரைக் கொலை செய்திருக்கின்றார்கள். என்னைக் கொலை செய்வதற்கு பல்வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டி



ருக்கின்றார்கள். எனினும் தென்னிலங்கையில் வாழ்ந்து வருகின்ற சிங்கள மக்களுடன் தேசிய நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் வலுப்படுத்துவதன் மூலமே, பிரச்னைகளை தீர்க்க முடியும் என்பதை உறுதியுடன் தெரிவித்து வந்துள்ளோம்.

அதனடிப்படையிலேயே எமது அரசியல் செயற்பாடுகளும், தென்னிலங்கை மக்களுடனும் அரசியல் கட்சிகளுடனான எமது உறவும் இருந்து வருகின்றது.

இந்த அணுகுமுறையினையே உங்களுடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். வன்முறைகள் ஊடாக எமது பிரச்னைகளை தீர்க்க முடியாது.

எனவே, எமக்கிடையில் இருக்கின்ற அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால், கலந்துரையாடல்களை மேற்கொண்டு எமது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வை காண்போம். எமது எதிர்காலத்தையும் எமது தாய்நாட்டையும் பாதுகாப்போம் - என்றுள்ளது. (அ)

# ஓ.எல். பரீட்சை திட்டமிட்டபடி மே 23 ஆம் திகதி ஆரம்பமாகும்

கொழும்பு, மே 12

2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகளை ஒத்திவைக்க எந்த முடிவும் எட்டவில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி மே 23ஆம் திகதி ஆரம்பமாகி ஜூன் முதலாம் திகதிவரை நடைபெறும் என்று அவர் குறிப்பிட்டார். (அ)

# துப்பாக்கி சூடு நடத்தும் உத்தரவு சட்டவிரோதம்!

## சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 12

**சொத்துகளுக்குச் சேதம் விளைவிப்பவர்கள் மீது முப்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தலாம் என்ற உத்தரவு சட்டவிரோதமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

பொதுச் சொத்துக்கள் அல்லது தனிப்பட்ட சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் அனுமதி வழங்கப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கேணல் நளின் ஹேரத் தெரிவித்தார்.

இந்நிலையில் இது தொடர்பாக தனது ருவிட்டர் தளத்தில்



கருத்து தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன், அரசியலமைப்பின் 52(3) பிரிவின்படி அமைச்சரவை கலைக்கப்படும்போது அனைத்து அமைச்சின் செயலாளர்களும் பதவி வகிப்பதை நிறுத்துவார்கள்.

அந்த வகையில் பொதுச் சொத்துக்கள் அல்லது தனிப்பட்ட சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முப்படையினருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்டதாக கூறப்படும் அனுமதி சட்டவிரோத உத்தரவு-என்றார். (அ)

# அலரிமாளிகை சம்பவத்துடன் தொடர்புடையோரை சில மணித்தியாலங்களில் கைது செய்ய வேண்டும்

## சாலிய பீரிஸ் கோரிக்கை

கொழும்பு, மே 12

அலரிமாளிகை சம்பவத்துடன் தொடர்புடையவர்களை அடுத்த சில மணித்தியாலங்களில் கைது செய்ய வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணியும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருமான சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இவ்வாறான கைதுகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனவும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சிலர் வெளிநாடு செல்ல முயற்சிக்கின்றனர் என்றும் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லப் போகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, அவர்கள் மீது குறிப்பாக அலரிமாளிகை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கூறிய அவர், அவர்களை நாட்டைவிட்டு வெளியேற அனுமதிக்காதீர்கள் என்றும் கோரினார். (அ)

# இலங்கை அரசியல்வாதிகள் யாரும் இந்தியாவுக்கு தப்பி செல்லவில்லை

கொழும்பு, மே 12

அண்மைய நாட்களில் குறிப்பிட்ட சில அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் இந்தியாவுக்கு தப்பிச் சென்றதாக சமூக ஊடகங்களில் பரவும் தகவலை கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் மறுத்துள்ளது.

தூதரகம் வெளியிட்ட அறிக்கையில், சில அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் இந்தியாவுக்கு தப்பிச் சென்றதாக ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் பிரிவுகளில் வதந்திகள் பரவுவது அண்மைக் காலமாக கவனிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய அறிக்கைகளுக்கு எந்த அடிப்படையும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சஜித் பிரதமரானால் ஆதரவளிக்க தயார்!

## சிறீலங்கா சுதந்திரக் கட்சி

கொழும்பு, மே 12

சஜித் பிரேமதாஸ ஆட்சியைப் பொறுப்பேற்றால் அதற்கு ஆதரவளிக்கத் தயார் என சிறீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

மகாசங்கத்தினருடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால் மாத்திரமே, சஜித் பிரேமதாஸ பிரதமர் பதவியை ஏற்பாரென பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (அ)

# இலங்கையுடன் கலந்துரையாடலை ஆரம்பித்த சர்வதேச நாணய நிதியம்

கொழும்பு, மே 12

இலங்கையுடனான கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

மே 9 ஆம் திகதி முதல் இந்தப் கலந்துரையாடல் ஆரம்பமாகி மே 23 ஆம் திகதி வரை தொடரும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்பாட்டுத் தலைவர் மசகிரோ நொசாகி தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் கொள்கை விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பிக்க சர்வதேச நாணய நிதியம் தயாராக இருப்பதாக அவர் மேலும் கூறினார். (அ)

# விசேட இராணுவ பாதுகாப்பு ஏற்பாடுகள் நாடு முழுவதும்

கொழும்பு, மே 12

கொழும்பு நகரம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பாகங்களில் இராணுத்தினரால் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய, கவச வாகனங்களுடன் நேற்று காலை முதல் கொழும்பு நகரில், கண்காணிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

அத்துடன், விசேட படையணியின் உந்துருளி பிரிவு, கொழும்பு, புறக்கோட்டை, மீரிஹான, கிருலப்பனை, கொள்ளுப்பிட்டி முதலான பகுதிகளில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நிதானம், சகிப்புத்தன்மையை ஊக்குவித்தல் இன்றியமையாதது

## ஜனாதிபதி மக்களிடம் கோரிக்கை

கொழும்பு, மே 12

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விசேட கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

அதில் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சவால்களை வெற்றி கொள்வதற்கு, அனைத்து இலங்கையர்களும் ஒன்றாக கைகோர்க்கவேண்டிய தருணம் இது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது ருவிட்டர் கணக்கில் பதிவு ஒன்றை இட்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

“இன மற்றும் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் நோக்கில் உங்களைத் தள்ளும் நாசகார முயற்சிகளை நிராகரிக்குமாறு அனைத்து இலங்கையர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிதானம், சகிப்புத்தன்மை மற்றும் சகவாழ்வை ஊக்குவித்தல் இன்றியமையாதது” என அவர் அதில் மேலும் கூறியுள்ளார். (அ)

# வடக்கு-கிழக்கில் மூவினமும் ஒற்றுமையாக இருப்போம்!

## விமலசாரதேரர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 12

இந்த சூழ்நிலையில் வடக்கு - கிழக்கில் வசிக்கும் மூவினத்தவரும் ஒற்றுமையாக இருப்போம் என வடக்கு முதன்மை சங்கநாயக்க தேரர் பூஜ்ய சியம்பலாகஸ்வெவ விமலசார தேரர் தெரிவித்தார்.

நாட்டு நிலைமை தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசுக்கு எதிராக கொழும்பு காலி முகத்திடலில் ஒரு மாதத்துக்கும் மேலாக அஹிம்சை ரீதியான போராட்டம் இடம்பெற்று வந்தது. அதனை பொருட்படுத்தாத அரசாங்க ஆதரவாளர்கள் அவர்களை தாக்கி போராட்டத்தை குழப்பியமையாலேயே நாட்டில் இந்த சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்த சூழ்நிலையில் எங்களுக்குள் இன மத மொழி பேதம் பார்த்தால் போராட்டத்தின் நோக்கமே தடம் மாறிபோய் விடும். எனவே அதற்கு இடம் கொடுக்காமல் அனைத்து இனத்தவரும் ஒற்றுமையாக ஒன்றிணைந்தாலே இந்த போராட் ணடம் வெற்றியடையும்.

எனவே வடக்கு-கிழக்கில் வசிக்கும் தமிழ், சிங்கள, முஸ்லீம் சகோதரர்கள் இப்படியான சூழ்நிலையில் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்-என்றார். (அ)

# ஜோன்ஸ்டனின் வீட்டில் இருந்து எரிவாயு கொள்கலன்களை எடுத்து சென்ற மக்கள்!

கொழும்பு, மே 12

குருநாகல் பிரதேசத்தில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, குருநாகல் நகர பிதா துஷார சஞ்சீவ மற்றும் குருநாகல் பிரதேச சபைத் தலைவர் அச்சல நிமந்த ஆகியோரின் வீடுகளில் இருந்து எரிவாயு கொள்கலன்களை மக்கள் தமது பாவனைக்காக எடுத்துச் சென்று உள்ளனர் என்று கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

12.5 கிலோ கிராம் எடையுள்ள சுமார் 140 எரிவாயுக் கொள்கலன்கள் என்றும் இதில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் குருநாகல் லேக் வீதியில் உள்ள வீட்டில் மட்டும் 80 ற்கும் அதிகமான எரிவாயு கொள்கலன்கள் மீட்கப்பட்டதாக கொழும்புச் செய்திகள் மேலும் கூறின. (அ)

# ஜனாதிபதி கோட்டா பதவி விலகவேண்டும்

## செல்வம் எம்.பி. கோரிக்கை

மன்னார், மே 12

**மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி ஆகியோர் காலம் கடந்து முடிவுகள் எடுப்பது தவறு.மக்கள் விரும்பவில்லை என்றால் அவர்கள் தமது பதவிகளை விட்டுச் செல்லவேண்டும் என்பதே காலத்தின் நீதி. பிரச்னைகளை ஏற்படுத்தி இன முறுகலைத் தூண்டி விட்டு இழப்புக்களை சந்தித்த பின்பு தமது பதவிகளை ராஜினாமா செய்வது என்பது முட்டாள்தனம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**



மன்னாரில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு மிகவும் கொந்தளிப்பான நிலையில் இருந்து கொண்டு இருக்கின்றது.சிங்கள தேசத்தில் போராட்ட வடிவில் பல விடயங்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷவின் ஆரம்ப பிரச்னையே இன்று பாரிய அளவில் வெடித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும்.எங்களுடைய பங்களிப்பு குறித்த விடயங்களில் இருந்தால் விடுதலைப் புலிகளை காரணம் காட்டி திசை திருப்பும் கெட்டித்தனம் இந்த அரசாங்கத்திடம் இருக்கின்றது.

விடுதலைப்புலிகளை காரணம் காட்டி சிங்கள மக்களை திசை திருப்பும் ஒரு நிலையை அவர்கள் ஏற்படுத்துவதற்கு நாங்கள் அனுமதிக்கக்கூடாது.

காலச் சக்கரம் சுழன்று கொண்டு இருப்பதை பார்க்கின்றபோது இந்த மே மாதத்தில் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்னைகளை சந்தித்தார் கள். உயிர் அவலம் ஏற்பட்டது.மே 18 இல் எமது மக்கள் படு கொலை செய்யப்பட்டார்கள்.

அவர்களின் சடலங்கள் புதைக்கப்பட முடியாத நிலையில் அநாதையாக கைவிடப்பட்டன. தனது தாய், தந்தை, உறவுகள் உயிரிழந்து சடலமாக கிடக்கும்போது அதனை தாண்டி வருகின்ற அவலமான சூழ்நிலை ஏற்பட்டது.

மே மாதம் என்பது எமது மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கின்றது. எங்கள் மக்களுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு எதிராக இந்த மே மாதத்தில் நிலைமைகள் மாறி இருப்பது கவலை தருகின்ற விடயமாக இருந்தாலும்,இறைவன் ஒரு நியாயமான செயல்பாட்டை மேற்கொண்டுள்ளார் என்று நாங்கள் கருத முடியும்.

சிங்கள மக்கள் மத்தியில் நாங்கள் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களுக்கும் பாரிய பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன.

சிங்கள மக்களால் ஆதரிக்கப்பட்ட சம்பந்தப்பட்டவர்கள் இன்று அந்த மக்களாலேயே துரத்தப்பட்டு பழிவாங்கப்படுகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டங்கள் உள்ளிட்ட எமது மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இறைவனின் நாட்டம் எம் மக்களுடன் உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

மஹிந்த மற்றும் ஜனாதிபதி ஆகியோர் காலம் கடந்து முடிவுகள் எடுப்பது தவறு.மக்கள் விரும்பவில்லை என்றால் அவர்கள் விட்டுச் செல்லவேண்டும் என்பதே காலத்தின் நீதி.

எனவே ஜனாதிபதி இராஜினாமா செய்ய வேண்டும். அப்போது தான் நாட்டில் ஏற்பட்டுள்ள மக்கள் புரட்சியை முடிவுக்கு கொண்டு வர முடியும்-என்றார். (அ)

# மஹிந்தவின் இல்லத்தை எரித்தவர்கள் இரக்கத்துக்கு தகுதியானவர்களல்லர்!

## சுப்ரமணியன் சுவாமி ஆவேசம்



புதுடில்லி, மே 12

பிரதமராக இருந்த மஹிந்தவின் இல்லம்கூட எரிக்கப்படுகின்றது என்றால் அதற்கு காரணமானவர்கள் இரக்கம் காண்பிக்கப்படுவதற்குத் தகுதியானவர்கள் அல்லர் என இந்தியாவின் முன்னாள் அமைச்சர் சுப்ரமணியம் சுவாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில் மேலும், பிரதமரின் இல்லம்கூட எரிக்கப்படுகின்றது என்றால், அதற்குக் காரணமானவர்கள் இரக்கம் காண்பிக்கப்படுவ தற்குத் தகுதியானவர்கள் அல்லர்.

எமது அயல்நாடு மற்றுமொரு லிபியாவாக மாறுவதற்கு அனுமதிக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பி வைத்து அரசியல் அமைப்பின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்ய வேண்டுமென அவர் அண்மையில் கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தார். (அ)

# தினேஸ் குணவர்தனவின் வீட்டின் மீதும் தாக்குதல்!

கொழும்பு, மே 12

முன்னாள் சபை முதல்வரும் அமைச்சருமான தினேஸ் குணவர்தனவின் கொழும்பில் உள்ள வீட்டின் மீது இனந்தெரியாத நபர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் தினேஸ் குணவர்தன, சபாநாயகருக்கு அறிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# சகல பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யுங்கள்

## பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை

கொழும்பு, மே 12

சகல பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றம் கூட்டப்படுவதற்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் எனவும் சபாநாயகர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வடக்கு-கிழக்கில் வன்முறைகளுக்கு ஒருபோதுமே இடமளிக்கவேண்டாம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 12

தமிழர் தாயகத்தில் வன்முறைகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்றும் சிங்கள தேசத்தின் பொருளாதார மோதலில் தமிழ்த் தேசம் சிக்குப்படாது அமைதியாக இருப்பதே உசிதமானது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் அலுவலக பதாகைக்கு தீ வைத்தமை தொடர்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

நாட்டின் இந்த நிலமைக்கும் தமிழ்த் தேசத்தின் அவலத்துக்கும் அங்கஜன் இராமநாதன், டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான், வியாழேந்திரன் மற்றும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளுக்குள் மறைந்திருந்து அரச நிகழ்ச்சி நிரலை கனகச்சிதமாக நகர்த்துபவர்களும் காரணமென்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

அதற்காகத் தமிழர் தாயகத்தில் அவர்களைத் தாக்குவதையோ அல்லது அவர்களது அலுவலகங்களுக்குத் தீ வைப்பதையோ ஜனநாயக அரசியலில் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவர்களுக்கான சரியான தண்டனை அடுத்த பொதுத் தேர்தலில் இவர்களுக்கு வாக்களிக்காது முற்றாகப் புறக்கணித்து இவர்களை அரசியல் அநாதைகளாக்குவதே!

சிங்கள தேசத்தின் பொருளாதார மோதலில் தமிழ்த் தேசம் சிக்குப்படாது அமைதியாக இருப்பதே உசிதமானது. தமிழர் தாயகத்திலிருந்து சிங்களக் கட்சிகளுக்கு ஆதரவளித்த மக்களில் ஒருசாராருக்குத் திருந்துவதற்கு சந்தர்ப்பமொன்றை வழங்கி அவர்களையும் தமிழ்த் தேசியத்தின்பால் ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் கருத்துருவாக்கத்தையும் முன்னெடுப்பதே தமிழினத்தின் தேச விடுதலைக்கு வழிவகுக்கும் - வலுச் சேர்க்கும் என்று உறுதியாக நம்புகின்றோம்.

கடந்த காலத்தில் தமிழ்த்தேசியத்திற்கு ஊறுவிளைவித்து சிங்களத்தின் நிகழ்ச்சி நிரலைத் திட்டமிட்டு முன்னெடுத்த அங்கஜன் இராமநாதன், டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான்,வியாழேந்திரன் மற்றும் போலித் தமிழ்த் தேசியவாதிகள் போன்றோரை எதிர்காலத்தில் அரசியல் ரீதியாகத் தோற்கடித்து தமிழ்த் தேச விடுதலைக்கு வலுச்சேர்க்க அனைவரும் சபதமெடுப்போம்-என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர் போராட்டம்!

கிளிநொச்சி, மே 12

கிளிநொச்சி வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் நேற்று புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது.

வைத்தியசாலை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் ஏ-9 வீதியில் கவனயீர்ப்புப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது.

தமது தொழிற்சங்க நடவடிக்கையை மக்கள் நலன் கருதி கைவிடுவதாகவும், வன்முறைக்கு வன்முறை தீர்வாகாது என்பதால் அமைதியாக நாட்டு மக்கள் போராட வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (அ)

# மஹிந்த ராஜபக்ஷ பெற்ற உச்சமும் வீழ்ச்சியும்



**விக்னேஷ். அ - பிபிசி தமிழ்**

ஓரிடத்தில் நிலைமை மோசமாகிறது என்றால் “பற்றி எரிகிறது“ என்ற உவமையைப் பயன்படுத்துவோம். பொருளாதார நெருக்கடியால் போராட்டங்களைச் சந்தித்துவந்த இலங்கை இப்போது உண்மையாகவே பற்றி எரிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் வீழ்த்தப்பட்ட 2009ஆம் ஆண்டு மே மாதம் அரசியல் செல்வாக்கின் உச்சத்தைத் தொட்ட மஹிந்த ராஜபக்ஷ, மக்கள் போராட்டம் தீவிரமடைந்த 2022ஆம் ஆண்டு மே மாதம் இதுவரை இல்லாத அளவுக்கு சரிவைச் சந்தித்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷவின் வாழ்வில் மறக்க முடியாத காலங்களாக அமைந்த இந்த இரண்டு மே மாதங்கள் குறித்துப் பாப்போம்.

**மஹிந்த ராஜபக்ஷ:**
**சரிந்த செல்வாக்கு, சாம்பலான வீடு**

பிரதமர் பதவியில் இருந்து விலகிய மஹிந்த ராஜபக்ஷ, பிரதமரின் அலுவல்பூர்வ இல்லமான அலரி மாளிகையிலிருந்து அவரது குடும்பத்தினருடன் வெளி



யேறியதாகவும், விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் ஒன்றில் சென்று திருகோணமலை கடற்படை முகாமில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின. இந்தத் தகவல்களை செய்தியாளர்களால் சுயாதீனமாக உறுதி செய்ய இயலவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருக்கும் அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் தங்கள் இளமைக் காலத்தைக் கழித்த அவர்களது பூர்விக வீடும் தீக்கிரை ஆக்கப்பட்டது. இலங்கையின் தெற்கு மாகாணத்தின் உள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள வீரகட்டிய எனும் கிராமத்தில் ராஜபக்ஷ குடும்பத்தின் பூர்விக வீடு உள்ளது.

அரசு அருங்காட்சியகமாக செயல்பட்டு வந்த அந்த வீடு மே 9 ஆம் தேதி தீக்கிரையாக்கப்பட்டது. முற்றிலும் எரிந்து முடிந்த அந்த வீடு இப்போது சாம்பல் மண்டபமாக மட்டுமே எஞ்சி நிற்கிறது. முதலில் வழக்கமான ஒரு கிராமத்து வீடாக இருந்த இந்த வீடு ராஜபக்ஷ சகோதரர்கள் அரசியல் செல்வாக்கு பெற்ற பின்னர் மறுநிர்மாணம் செய்யப்பட்டது. பின்னர் அருங்காட்சியகமாக அறிவிக்கப்பட்டது.

வீரகட்டிய கிராமத்தில் அமைத்திருந்த ராஜபக்ஷ சகோதரர்களின் பெற்றோரது சமாதிகளும், அவர்களது தந்தை டான் ஆல்வின் ராஜபக்ஷவின் சிலையும் அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களால் கடுமையான சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் வடமேற்கு மாகாணத்தின் தலைநகரான குருணாகல் நகரில் உள்ள, மஹிந்த ராஜபக்ஷவுக்கு சொந்தமான வீடு ஒன்றுக்கும் அரசுக்கு எதிரான போராட்டக்காரர்கள் தீ வைத்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புடைய இரு வீடுகள் மட்டுமல்லாது, தம்மைத் தாமே சுட்டுக் கொண்டு உயிரை மாய்த்துக் கொண்டிருக்கலாம் என்று இலங்கை பொலிசாரால் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவின் வீடும் போராட்டக்காரர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை தேர்தல் மாவட்டத்தை மஹிந்த ராஜபக்ஷவின் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினரான இவர் மேற்கு மாகாணத்தில் உள்ள கம்பஹா மாவட்டத்தில் அமைந்திருக்கும் நிட்டம்புவ பகுதியில் மே 9ஆம் தேதி பிற்பகல், சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

மே 9 அன்று, கொழும்பில் உள்ள காலி முகத்திடலில் போராடியவர்களுக்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டனர்.

அரசுக்கு எதிரான போராட்டக்காரர்கள் அமைத்திருந்த கூடாரங்கள் மற்றும் பிற உள்கட்டமைப்புகளை அவர்கள் சேதப்படுத்தினர். எதிரெதிர் தரப்பினர் ஒரே இடத்தில் திரண்டதால் அங்கு பொலிசார் மற்றும் ராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

பாதுகாப்புப் படையினரையும் மீறி இருதரப்பினரும் கற்கள், கட்டைகள் ஆகியவற்றைக் கொண்டு மோதிக் கொண்டனர். நேரடிக் கைகலப்பும் நடந்தது.

அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்களையும் ராஜபக்ஷ ஆதரவாளர்கள் தாக்குவது, அவர்கள் தலை முடியைப் பிடித்து இழுப்பது ஆகியவற்றைக் காட்டும் காணொளிகள் மற்றும் படங்களும் சமூக ஊடகங்களில் வெளியாகின.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற எதிர் கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச போராட்டம் நடந்த பகுதிக்கு வந்தார். அவரை ராணுவ அதிரடிப்படை வீரர்களும் உள்ளூர் பொலிஸாரும் பாதுகாப்புடன் அழைத்து வந்தனர்.

காலி முகத்திடல் பகுதிக்குள் அவர் நுழைந்தபோது, அவரை நோக்கி கட்டைகளையும் தண்ணீர் பாட்டில்களையும் வீசினார்கள்.

பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவும் அமைதி காக்கும்படி நாட்டு மக்களுக்குக் கோரிக்கை வைத்த அடுத்த சில மணிநேரங்களிலேயே தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பினார் மஹிந்த ராஜபக்ஷ.

ஆனாலும், காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது நடந்த தாக்குதல் குறித்த செய்திகள் நாடு முழுவதும் தீயைப் போல பரவியது. அது மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டுக்கு தீ வைப்பதில் போய் முடிந்தது.

**உச்சத்தைத் தொட்ட மஹிந்த:**
**பிரபாகரன் கொல்லப்பட்ட மே 2009**

அரை நூற்றாண்டுக்கும் மேலாக அரசியலில் ஈடுபட்டு வரும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்த மே மாதம் போல எதிர்ப்பும் சறுக்கலும் நிறைந்த மாதம், இதுவரை எதுவும் இல்லை. ஆனால், அவர் இலங்கை



யின் தற்கால அரசியல் வரலாற்றில் தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுக்க உதவியதும் ஒரு மே மாதம்தான். அது 2009 மே.

இலங்கையில் 26 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவிய உள்நாட்டுப்போர் தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை அரசுப் படைகள் வென்ற 2009ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்தது. இந்தப் போரில் குறைந்தது ஒரு லட்சம் பேர் உயிரிழந்தனர் சுமார் 20,000 பேர் காணாமல் போயினர்.

இலங்கை அரசுக்கும், அரசுப் படைகளுக்கும் பெரும் சவாலாக விளங்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மே 17, 2009 அன்று நந்திக்கடலில் இலங்கை படைகளால் கொல்லப்பட்டபோது, மஹிந்த ராஜபக்ஷ இலங்கை ஜனாதிபதியாக இருந்தார். 1970இல் தமது 24ஆம் வயதில் இலங்கை நாடாளுமன்றத்தில் நுழைந்த மூன்றாம் தலைமுறை அரசியல்வாதி மஹிந்த ராஜபக்ஷ அதற்கு முன் சுமார் ஒன்றரை ஆண்டு காலம் இலங்கை பிரதமராக இருந்தார்.

ஒரு காலத்தில் மனித உரிமைகள் போராளியாக அறியப்பட்டு, அரசியலில் முக்கியத்துவம் பெற்ற மகிந்த ராஜபக்ஷ, 2009 மே மற்றும் அதற்கு முந்தைய மாதங்களில் நடந்த இறுதிப்போரில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. அதற்கு ஆதாரங்கள் இருப்பதாக ஐநா மற்றும் பன்னாட்டு மனித உரிமை அமைப்புகள் நடத்திய விசாரணைகளின் அறிக்கைகள் கூறின. ஆனால், வெளிநாடுகளில் எந்த அளவுக்கு ராஜபக்ஷ மீது கண்டனங்கள் எழுந்தனவோ, அதே அளவுக்கு அவருக்கு உள்நாட்டில் அரசியல் செல்வாக்கும் உயர்ந்தது.

குழந்தைப் போராளிகள், மனிதக் கேடயங்களைப் பயன்படுத்துதல் போன்ற போர்க் குற்றங்களில் விடுதலைப் புலிகளும் ஈடுபட்டதாக அந்த அறிக்கைகள் கூறின. இது பௌத்த - சிங்கள பெரும்பான்மை மக்களிடையே அப்போதைய ஆளும் தரப்பால் கொண்டு சேர்க்கப்பட்டது. நாட்டில் தீவிரவாதத்தை அழித்துவிட்டதாகக் கூறியது மஹிந்த ராஜபக்ஷ தரப்பு.

விடுதலைப் புலிகளை வீழ்த்தியதில் இப்போதைய ஜனாதிபதியும், அப்போதைய பாதுகாப்புச் செயலருமாகிய கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், அப்போதைய ராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் அதிமுக்கியமான பங்குண்டு என்றாலும் மஹிந்தவின் அரசியல் தலைமையால்தான் அது சாத்தியமானது என்று இலங்கையின் பெரும்பான்மை சமூகம் நம்பியது.

அதற்கு சான்று 2010இல் அவர் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் வென்றது. அவரிடம் அந்தத் தேர்தலில், எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வியடைத்தவர் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் மஹிந்தவிடம் கட்டளைகளைப் பெற்று பணியாற்றிய முன்னாள் ராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

இரண்டாவது முறை மஹிந்த ஜனாதிபதியானதும், அவரது சகோதரர், மகன் மற்றும் குடும்பத்தினருக்கு கொடுக்கப்பட்ட அரசியல் பதவிகள் உள்ளிட்டவை, மக்களிடையே இருந்த அவரது செல்வாக்கிற்கு பலத்த சேதத்தை உண்டாக்கின.

இரண்டு முறைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதி ஆக முடியாது என்ற இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் சரத்தை தமது இரண்டாவது பதவிக் காலத்தின்போது திருத்திய மஹிந்த, 2015 ஜனாதிபதி தேர்தலில் மூன்றாவது முறையாகப் போட்டியிட்டார். ஆனால், பல எதிர்க் கட்சிகளின் கூட்டு வேட்பாளராகப் போட்டியிட்ட, பெரிய அரசியல் செல்வாக்கோ, மக்கள் செல்வாக்கோ இல்லாத மைத்திரிபால சிறிசேன இந்தத் தேர்தலில் மஹிந்தவை வீழ்த்தினார்.

(மறு பக்கம் பார்க்க)



# கொந்தளிப்பில் கொழும்பு!



(இந்தியப் பத்திரிகை 'தினமலர்' பார்வையில் இலங்கை நெருக்கடி)

ராஜபக்ஷ சகோதரர்களின் குடும்ப ஆட்சி ஏற்படுத்தியிருக்கும் பொருளாதார நெருக்கடி, அரசியல் குழப்பம் இவற்றால் சுனாமி போன்ற பேரழிவைச் சந்தித்து வருகிறது இலங்கை. அத்தியாவசிய பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, விலைவாசி அதிகரித்திருப்பதால் மக்கள் கொந்தளித்துப்போய் இருக்கிறார்கள். அதன் காரணமாக நாடு தழுவிய அளவில் இலங்கையில் வன்முறை எழுந்திருக்கிறது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்பேற்று அதிபர் கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பதவி விலக வலியுறுத்தி கடந்த ஏப். 9 ஆம் திகதி தொடங்கிய பொதுமக்களின் தன்னெழுச்சிப் போராட்டம், சரியாக ஒரு மாத நிறைவில் வன்முறைப் போராட்டமாக மாறியிருக்கிறது. தலைநகர் கொழும்பில் அதிபர் அலுவலகம் அருகேயுள்ள காலிமுகத் திடலில் கட்சி பேதம், இன பேதமின்றி போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் மீது, மஹிந்த ராஜபட்ஷ ஆதரவாளர்கள் நடத்திய கொலை வெறித் தாக்குதலே நாடு முழுவதும் வன்முறைக்கு வித்திட்டதாக ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வன்முறையில் இதுவரை ஆளுங்கட்சி எம்.பி. ஒருவர் உட்பட எட்டு பேர் உயிரிழந்துள்ளனர். அம்பந்தோட்டையில் உள்ள ராஜபக்ஷ சகோதரர்களின் தந்தை நினைவிடமும், வீடுகளும் தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. 14 முன்னாள் அமைச்சர்கள், 18 எம்.பி.க்கள், ராஜபட்ச விசுவாசிகள் ஆகியோரின் வீடுகள் தாக்கப்பட்டுள்ளன. ஏராளமான சொத்துகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை பல்வேறு சர்வதேச அமைப்புகளுக்கும், நாடுகளுக்கும் திருப்பித் தர வேண்டிய கடனின் அளவு சுமார் ஏழு பில்லியன் டாலர் (சுமார் ரூ.54,123 கோடி). இலங்கையின் ஜிடிபியில் 119வீத அளவில் வெளிநாட்டுக் கடன் காணப்படுகிறது. 2021 நிதியாண்டில், வருவாயைவிட 2.4 மடங்கு அதிக அளவிலான செலவினங்கள் காணப்பட்டன.

பொருளாதார நெருக்கடி தொடங்கியபோது ராஜபக்ஷ சகோதரர்களின் அரசு அலட்சியமாக இருந்ததுதான் இலங்கையை இந்த அளவுக்கு மோசமான நிலைமைக்குக் கொண்டு சென்றது. நாட்டு மக்களின் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் போராட்டத்தை ஒடுக்குவதிலேயே அதிபர் கோத்தபய குறியாக இருந்தார். ஏப். முதலாம் திகதி அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டது.

பொருளாதார பிரச்னைகளுக்குப் பொறுப்பேற்று பிரதமர் மகிந்தவைத் தவிர ஏனைய அமைச்சர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக ராஜினாமா செய்தனர். தனது மற்றும் தன் சகோதரர் மஹிந்த தலைமையில் அனைத்துக் கட்சிகள் அடங்கிய இடைக்கால அரசு அமைக்க அதிபர் கோட்டாபய விடுத்த அழைப்பை எதிர்க்கட்சிகள் நிராகரித்தன. அதிபரும், பிரதமரும் பதவி விலக வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சிகளின் பிரதான கோரிக்கை. மீண்டும் அவர்களின் தலைமையிலான அரசில் இடம்பெற எதிர்க்கட்சிகள் தயாராக இல்லை. இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கு எதிர்க்கட்சிகளின் முடிவு வழிகோலியிருக்கிறது.

உள்நாட்டு பொருளாதாரத்துக்கு முக்கிய பங்களித்த சுற்றுலாத்துறை, கொரோனா பெருந்தொற்றால் முற்றி லும் முடங்கியது, பொருளாதார சீர்குலைவுக்கு மற் றொரு காரணம். கொள்ளை நோய்த்தொற்று காலத் துக்கு முன்பு வரை, ஆண்டுதோறும் 4.5 பில்லியன் டொலர் (சுமார் ரூ.35,000 கோடி) அளவில் இலங்கை சுற்றுலா மூலம் வருவாய் ஈட்டி வந்தது. இப்போது அந்த வருவாய் முற்றிலுமாக நின்றுவிட்டது. சர்வதேச நிதியம் கைகொடுக்காமல் போனால், 51 பில்லியன் டொலர் (சுமார் ரூ.3,95,000 கோடி) கடன் தொகைக்கு வட்டி செலுத்த முடியாத சூழலுக்கு இலங்கை தள்ளப்படும்.

இலங்கையின் அந்நியச் செலாவணி இருப்பு கணிசமாகக் குறைந்துவிட்டதால் உணவுப் பொருள்கள், கச்சா எண்ணெய் இவற்றின் இறக்குமதி தடைப்பட்டுள்ளது. துறைமுகத்தில் கப்பல்கள் சரக்குகளுடன் காத்திருந்தாலும் அதற்கான தொகையைச் செலுத்தி இறக்குமதி செய்ய முடியாத நிலையில் இலங்கையின் பொருளாதாரம் தவிக்கிறது.

அத்தியாவசியப் பொருள்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டு விலைவாசி எட்ட முடியாத அளவில் உயர்ந்தி ருக்கிறது. சர்வதேச நிதியத்தை அணுகி மேலும் கடனுதவி பெற ராஜபக்ஷ சகோதரர்கள் அரசு எடுக்கும் முயற்சி களுக்கு மக்கள் மத்தியில் எதிர்ப்பு எழும்பியிருக்கிறது. சர்வதேச நிதியம் விதிக்கும் நிபந்தனைகள் இலங்கையை மேலும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக்கக்கூடும் என்று மக்கள் அஞ்சுகிறார்கள்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பதவி விலகி இருக்கிறார். அதிபர் கோத்தபய போராட்டத்தை அடக்க முப்படைகளுக்கும் முழு அதிகாரம் வழங்கியிருக்கிறார். அதன் விளைவாக போராட்டம் ஓரளவுக்கு கட்டுக்குள் வந்திருக்கிறது என்றாலும் மக்கள் கொந்தளித்துப்போய் இருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை முன்னின்று நடத்திய மஹிந்த, கோட்டாபய சகோதரர்களை கொண்டாடிய சிங்கள மக்கள், இப் போது அவர்களுக்கு எதிராகக் கொதித் தெழுந்துள்ளனர். சர்வாதிகார மனநிலை கொண்ட ராஜபக்ஷ சகோதரர்கள், எளிதாக தங்களது அதி காரத்தை இழக்க முன்வரமாட்டார்கள். அவசரநிலை யைத் தொடர்ந்து அதிபர் கோட்டாபய ராணுவ ஆட்சியை அறிவிக்கக்கூடும்.

மக்களின் எதிர்ப்பு, பொருளாதாரப் பின்னடைவு, அந்நியச் செலாவணி வற்றிய கடன் சூழல் ஆகியவற்றின் பின்னணியில், ராணுவத்தை மட்டுமே நம்பி ராஜக்ஷ சகோதரர்களால் நீண்ட காலம் ஆட்சி நடத்திவிட முடியாது. அதே நேரத்தில், ஆட்சி மாற்றத்தால் மட்டும் இலங்கையை மீட்டெடுக்க முடியுமா என்கிற கேள்வியும் மக்களை மிரட்டுகிறது. எப்போதும் தண்ணீரில் மிதக்கும் சிங்களத் தீவு, இப்போது கண்ணீரில் மிதக்கிறது!

# மஹிந்த ராஜபக்ஷ பெற்ற...

(மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்ததும் அரசமைப்புச் சட்டம் மீண்டும் திருத்தப்பட்டு இருமுறை ஜனாதிபதி பதவி வகித்தவர் மூன்றாவது முறை போட்டியிட முடியாது என்ற பழைய விதியே கொண்டுவரப்பட்டது. ஜனாதிபதி பதவிக்காலமும் ஐந்து ஆண்டுகளில் இருந்து நான்கு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.)

ஏற்கனவே இரண்டு முறை ஜனாதிபதி பதவியில் மஹிந்த இருந்தார் என்பதால், 2019 ஜனாதிபதி தேர்தலில் அவரால் போட்டியிட முடியவில்லை. இலங்கை சுதந்திரக் கட்சியில் இருந்து 2016இல் மஹிந்த ராஜபக்ஷ உருவாக்கிய சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட மஹிந்தவின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாசவை வீழ்த்தி ஜனாதிபதியானார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னர் நடந்த ஈஸ்டர் குண்டு தாக்குதல்கள் இலங்கையை மட்டுமல்லாது ஒட்டுமொத்த உலகையே அதிர வைத்தன. ஆறு வெவ்வேறு இடங்களில் நடந்த இந்த குண்டுவெடிப்புகளில் 269 பேர் கொல்லப்பட்டனர்.

அப்போது ஆட்சியில் இருந்த ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் செல்வாக்கு சரிந்து அதலபாதாளத்திற்குச் செல்வதற்கு இந்த குண்டுவெடிப்புகள் காரணமாகின.

விடுதலைப் புலிகளை வீழ்த்திய கோட்டாபய ராஜபக்ஷ வலிமையான தலைவராகப் பார்க்கப்பட்டார். அவரது தேர்தல் வெற்றிக்கு பௌத்த - சிங்கள பெரும்பான்மை வாக்குகள் முதன்மையான காரணமாக அமைந்தன.

நவம்பர் 2019இல் கோட்டபாய ஜனாதிபதி ஆனதும், தோல்வியடைந்த சஜித் தரப்பைச் சேர்ந்த ரணில் பிரதமர் பதவியில் இருந்து விலகினார். அதன்பின் சிறுபான்மை அரசின் பிரதமராகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ, ஆகஸ்டு 2020இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வென்று மீண்டும் பிரதமரானார்.

2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலையான சுனாமி தாக்குவதற்கு சில மாதங்களுக்கு முன்னரே இலங்கை பிரதமராக, முதல்முறை பொறுப்பேற்ற மஹிந்த ராஜபக்ஷ, சுனாமியால் நாடு உருகுலைந்தபோதும், உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பது தடை இல்லாமல் இருக்கும் வகையில் நிர்வகித்ததாகப் பரவலாகப் பாராட்டப்பட்டார்.

உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்துக்குக் காரணமான ஒரு பொருளாதார நெருக்கடியே இன்று மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகக் காரணமாகியுள்ளது.







# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |
| **60.** | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |

## கல்வி tv CHANNEL-1

**12.05.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**12.05.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# ஊருக்குள் புகுந்தது கடல்நீர் அக்கரைப்பற்று மக்கள் அச்சம்!

அக்கரைப்பற்று, மே 12

அக்கரைப்பற்று கடற்கரைப் பகுதியை அண்டிய மக்கள் குடியிருப்புப் பகுதிக்குள் நேற்று அதிகாலை வேளை கடல் நீர் புகுந்தமையால் மக்கள் அச்சம டைந்ததுடன் பதற்ற நிலையும் ஏற்பட்டது.

அக்கரைப்பற்று மீரா நகரப் பிரதேசத்தில் வழமைக்கு மாறாக கடல் அலைகளின் தாக்கம் அதிகரித்து, கடல் நீர் கடற் கரையில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள நிலப் பகுதிக்குள்ளும் மக்கள் குடியிருப்புப் பிரதேசத் துக்குள்ளும் புகுந்தது.

கடல் நீர், கடற்கரைப் பிர தேசத்தில் அமைக்கப்பட்ட பிரதான காப்பெற் வீதியையும் தாண்டி, நிலப்பரப்பில் புகுந்த மையினால் கடற்கரையில் தரத்து வைக்கப்பட்ட படகு கள், சிறிய ரக வள்ளங்கள் மற் றும் கடற்றொழில் உபகரணங் கள் போன்றன கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டன என் றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், அதிகாலை 4 மணியளவில் நிகழ்ந்த இந்த சம்பவத்தைப் பார்வையிட பெருந் தொகையான மக்கள் அப்பிரதேசத்தை நோக்கிப் படையெடுத்தனர்.

இச் செய்தி அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகள் முழுவதும் பரவிய மையால், கடற்கரையை அண்டி வாழும் மக்களும் அச் சத்துக்குள்ளாகினர். (ஐ)

# பெரியநீலாவணை கடலில் நீந்திய இரு மாணவர் மாயம்!

கல்முனை, மே 12

கடலில் நீராடிக் கொண் டிருந்த மாணவர்களில் மூவர் அலையில் இழுத்துச் செல்லப் பட்ட நிலையில், இருவர் காணாமல் போயினர். ஒருவர் மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை அம்பாறை - பெரிய நீலாவணை பகுதியில் இடம் பெற்றுள்ளது.

அந்தப் பகுதி பாடசாலை ஒன்றில உயர்தரப்பிரிவில் கற் கும் மாணவர்களான இவர்கள் கடல் கொந்தளிப்பை பொருட் படுத்தாமல் நீராடியபோது இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

நீராடியவர்களை கடல் அலை அடித்துச் சென்ற நிலையில், துரிதமாக செயல் பட்ட மீனவர்கள் - கடற்படை யினரால் ஒருவர் காப்பாற்றப் பட்டார். காணாமல் போன இருவரையும் மீட்கும் பணி நேற்றும் தொடர்ந்தது. சீரற்ற வானிலை காரணமாக மந்த கதியிலேயே பணிகள் இடம் பெற்றன. எனினும் அவர்கள் மீட்கப்படவில்லை.

காப்பாற்றப்பட்ட மாணவர் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ - 1)

# நசீர் அகமட்டின் அலுவலகம் எரிப்பு இரவிரவாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

## பல நேர போராட்டத்தின்பின் நிலைமை கட்டுக்குள்

மட்டக்களப்பு, மே 12

**முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹபீஸ் நசீர் அகமட்டின் மட்டக் களப்பு மாவட்ட அலுவலகம் மற்றும் அவரின் உறவினரின் வர்த்தக நிலையம் என்பன நேற்றுமுன்தினம் இரவு எரிக்கப்பட்டன. அவருக்கு எதிராக இரவிரவாக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நேற்று அதிகா லையே பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.**

நேற்று முன்தினம் இரவு ஏறாவூர் பிரதான வீதியில் உள்ள உள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹபீஸ் நசீர் அகமட் டின் அலுவலகத்தை முற்றுகை யிட்ட பெருமளவான பொது மக்கள் அந்த அலுவலகத்தை தீயிட்டு எரித்தனர்.

இதனை தொடர்ந்து அதற்கு அருகில் உள்ள அவரின் சகோ தரரின் வர்த்தக நிலையமும் அடித்து உடைக்கப்பட்டு தீயிட்டு கொழுத்தப்பட்டன. அத்துடன் வீதிகளில் காட்சிப் படுத்தப்பட்டிருந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹபீஸ் நசீர் அகமட்டின் பதாகைகளும் உடைக்கப்பட்டு தீயிடப்பட் டன. அத்துடன், அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் பொலிஸார் குவிக்கப்பட்டு ஆர்ப்பாட்டப்




பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த அந்தப் பகுதிக்கு மேலதிக இராணுவத்தினர் அழைக்கப்பட்டனர். ஆர்ப் பாட்டக்காரர்களை கலைப்ப தற்கு கண்ணீர் புகைக்குண்டு கள் வீசப்பட்டன. பல மணி நேரப் போராட்டத்தின் பின்னர் நேற்று அதிகாலையே நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட் டது. இதைத் தொடர்ந்து ஏறா வூர் நகரம் முழுவதும் பாது காப்பு நடவடிக்கைகள் பலப் படுத்தப்பட்டுள்ளன. (ஐ - 1)

# பிள்ளையான், வியாழேந்திரனின் வீடுகளின் பாதுகாப்பு அதிகரிப்பு

மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பிலுள்ள இரண்டு முன்னாள் இராஜாங்க அமைச்சர்கள் உட்பட அரச ஆதரவு அரசியல்வாதிகளின் இல்லங்கள் மற்றும் அலுவல கங்களின் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை நாடளாவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத் தப்பட்டுள்ளது. இதையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், மட்டக்க ளப்பு வாவிக்கரை வீதியில் உள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் மன் றேசா வீதியில் உள்ள இரா ஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோரின் இல்லங்கள் மற்றும் அலுவல கங்களின் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஆதரவு அரசியல்வாதிகளில் அலுவலகங்கள் இல்லங்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட் டுள்ளமையை அவதானிக்க முடிந்தது.

இதேநேரம் மட்டக்களப்பு செங்கலடி சந்தியில் முன்னெ டுக்கப்படும் கோட்டா கோம் கிராமத்தில் போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டுவருவதை காணமுடி கின்றது.

குறித்த பகுதியில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் குறித்த போராட்டத்தில் பங் கெடுத்துவருவதுடன் தொடர்ச் சியான ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்துவருகின்றனர். (ஐ)

# ராஜபக்ஷக்களுடனான உறவை துண்டிக்கிறோம்!

## உலமா கட்சி அறிவிப்பு

அம்பாறை, மே 12

சிறீ லங்கா பொதுஜன பெர முன அரசாங்கத்தால் முஸ்லிம் சமூகமோ, எமது கட்சியோ உருப்படியான எந்த நன்மைக ளையும் அடையவில்லை. இந்த நாட்டை பொருளாதார ரீதி யில் கட்டியெழுப்பதில் அந்தக் கட்சி பெரும் தவறுகளை செய் துள்ளது. இதனால், 2019ஆம் ஆண்டு முதல் எமது கட்சி பொதுஜன பெரமுனவுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயல்படும் என்று ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித் துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், மஹிந்த ராஜ பக்ஷ நீண்ட கால அரசியல் அனுபவம் உள்ளவராக இருந்த போதும் தனது அருகில் கள்வர் களையும், கொள்ளையர்களை யும் வைத்துக்கொண்டிருந் ததால் நாடு அதலபாதாளத்தில் விழுந்து விட்டது.

கடந்த நல்லாட்சி என்பது முஸ்லிம்களின் 99வீத ஓட்டு களால் வந்தும் முஸ்லிம் சமூ கத்துக்கு அநியாயமே செய்தது. இந்த நிலையில் மஹிந்த தலைமையிலான பெரமுனவு டன் இணையும்படி எமக்கு வந்த அழைப்பை ஏற்று நாம் இணைந்தோம்.

ஆனாலும், ஜனாதிபதி தேர் தலை தொடர்ந்து நாம் முற்றாக கைவிடப்பட்டோம். பெரமுன வில் ஒட்டியிருந்த கள்ள முஸ் லிம் தரப்புக்கே முன்னுரிமை கொடுத்தனர். 2019இற்கு பின் இன்று வரை பசில் ராஜபக்ஷ எம்மோடு எந்த சந்திப்பையும் மேற்கொள்ளவில்லை என்பது டன் நாம் செய்து கொண்ட புரிந் துணர்வு ஒப்பந்தத்தின் ஓர் அம் சம் கூட நிறைவேற்றப்பட வில்லை - என்றும் கூறியுள் ளார். (ஐ)

# மண்டூர் வயல்வெளியில் ஆசிரியர் சடலமாக மீட்பு

மண்டூர், மே 12

மண்டூர் பிரதேசத்தில் வயல் வெளியிலிருந்து ஆசிரியர் ஒரு வரின் சடலம் மீட்கப்பட் டுள்ளது.

மண்டூர் பிரதேசத்தைச் சேர்ந்த பூபாலபிள்ளை சசிக ரன் (வயது 48) என்பவரே சட லமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் வயலைப் பார்வையிடுவதற்காக சென்ற வர் நீண்டநேரமாகியும் திரும்ப வில்லை. இந்நிலையில், அவரை குடும்பத்தார் தேடிச் சென்ற போது சடலமாகக் காணப் பட்டார்.

நீதிவானின் கட்டளைக்கு அமைய மண்டூர் பிரதே திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை நேரில் பார்வையிட்டு உடல்கூற்று பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத் துவமனைக்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார்.

வெல்லாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

# மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் கேட்ஸுக்கு கொரோனா!



நியூயோர்க், மே 12

மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் தனக்கு லேசான அறிகுறிகளுடன் கூடிய கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதை வீட்டில் தனிப்படுத்திக் கொண்டுள்ளதாக கூறியுள்ளார்.

உலக பணக்காரர்களில் ஒருவரும், மைக்ரோசாப்ட் இணை நிறுவனருமான பில்கேட்ஸ் கொரோனா நோய்த்தொற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு, குறிப்பாக தடுப்பூசிகள் மற்றும் ஏழை நாடுகளுக்கான கொரோனா தடுப்பு மருத்துகள் வழங்கும் அணுகலுக்கான ஆதரவாளராக இருந்து வருகிறார்.

இந்நிலையில், அவருக்கு தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

பில்கேட்ஸ் கொரோனா தடுப்பூசிகளின் இரு டோஸ்களையும் பூஸ்டர் டோஸ் தடுப்பூசியும் செலுத்திக்கொண்டுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் கூறியுள்ளதாவது:

“எனக்கு கோவிட் தொற்று இருப்பது உறுதியானது. நான் லேசான அறிகுறிகளே உள்ளது. நான் மீண்டும் நல்ல உடல்நலத்துடன் திரும்பும் வரை தனிமைப் படுத்திக் கொள்ள வேண்டும் என மருத்துவ நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். அந்த ஆலோசனைகளை பின்பற்றுகிறேன்.”



# உக்ரைனின் ஒடேசா நகரம் மீது ஹைப்பர்சானிக் ஏவுகணை தாக்குதல்!

## ரஷ்ய ராணுவம் தீவிரம்

கீவ், மே 12

உக்ரைனின் ஒடேசா நகரம் மீது ஹைப்பர்சானிக் ஏவுகணை மூலம் ரஷ்ய ராணுவம் தாக்குதலை தொடங்கியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த பிப்ரவரி மாதம் 24ஆம் திகதி தொடங்கிய போர் 2 மாதங்களைத் தாண்டியும் நீடித்தபடி உள்ளது. தற்போது கிழக்கு உக்ரைனில் ரஷ்ய படைகள் தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகின்றன.

ரஷ்யாவின் தாக்குதலில் உக்ரைனின் துறைமுக நகரமான மரியுபோல், தலைநகரான கீவ் ஆகியவை முற்றிலும் உருக்குலைந்து போய் உள்ளன. சில நாட்கள் முன்பு மரியுபோல் நகரை முழுமையாக கைப்பற்றிவிட்டதாக ரஷ்யா அறிவித்தது.

அப்போது, மரியுபோல் நகரில் உள்ள அசோவ்ஸ்டல் உருக்காலையில் உக்ரைன் வீரர்கள், பொதுமக்கள் தஞ்சம் அடைந்தனர். சரண் அடைய ரஷ்யா விடுத்த உத்தரவை உக்ரைன் வீரர்கள் ஏற்க மறுத்து விட்டனர்.

அசோவ்ஸ்டல் உருக்காலையில் சிக்கி இருக்கும் பொதுமக்கள் பாதுகாப்பாக வெளியேற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ரஷ்யாவை உக்ரைன் உள்ளிட்ட உலக நாடுகள் வலியுறுத்தின.

ஐ.நா.சபை, செஞ்சிலுவை சங்கம் ஆகியவை இணைந்து மீட்பு நடவடிக்கையை ஒரு வாரத்துக்கு முன்பு தொடங்கின. இதைத் தொடர்ந்து உருக்காலையில் இருந்து பொதுமக்கள் பத்திரமாக அழைத்து வரப்பட்டனர்.

இந்நிலையில் உக்ரைனின் ஒடேசா நகரம் மீது ரஷ்ய இராணுவம் ஹைப்பர்சானிக் ஏவுகணை மூலம் தாக்குதலைத் தொடங்கியுள்ளது. ஹைப்பர்சானிக் ஏவுகணை வகைகள் ஒலியைவிட குறைந்தது 5 மடங்கு வேகத்தில் செல்லக்கூடியவை ஆகும்.

நேற்று முன்தினம் இரவு முதல் இந்தத் தாக்குதலை ரஷ்யா நடத்தி வருவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. கருங்கடல் பகுதியில் துறைமுக நகரமான ஒடேசா நகரம் அமைந்துள்ளது.

இந்நிலையில் கடந்த மார்ச்சில் கார்கிவ் நகரிலுள்ள இஸியும் பகுதியில் ரஷ்ய ராணுவம் நடத்திய தாக்குதலில் 5 மாடிக் கட்டிடம் தரைமட்டமானது. அந்த கட்டிடத்தின் இடிபாடுகளில் இருந்து 44 பொதுமக்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக உக்ரைன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறும்போது, “பொதுமக்கள் மீது ரஷ்ய ராணுவம் நடத்திய மற்றொரு மோசமான போர்க் குற்றமாகும் இது” என்றார்.



# மரியுபோல் இரும்பாலையில் இறுதி கட்ட சண்டை?

கீவ், மே 12

ரஷ்யாவால் சுற்றிவளைக்கப்பட்டுள்ள மரியுபோல் இரும்பாலைக்குள் பதுங்கியுள்ள உக்ரைன் ஆதரவு படையினருக்கும் ரஷ்யப் படையினருக்கும் இடையே இறுதிகட்ட சண்டை நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து அந்த இரும்பாலையிலிருந்து உக்ரைன் ஆதரவு படையினர் கூறுகையில், அஸோவ்ஸ்டல் இரும்பாலையைக் கைப்பற்ற ரஷ்யா தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளதாகக் கூறினார். மேலும், இரும்பாலைக்குள் ஏராளமான வீரர்கள் காயமடைந்துள்ளதாக அவர்கள் கூறினர்.

முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக நகரான மரியுபோலை ரஷ்யா கைப்பற்றினாலும், அந்த நகரில் 100 கி.மீ. பரப்பளவில் பரவியுள்ள, சுரங்க அறைகள் நிறைந்த அஸோவ்ஸ்டல் இரும்பாலைக்குள் ஏராளமான பொதுமக்களுடன் உக்ரைன் அரசுக்கு ஆதரவான அஸோவ் படையினர் பதுங்கியிருந்தனர்.

ஐ.நா. உதவியுடன் அங்கிருந்த பொதுமக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டதையடுத்து, அந்த ஆலை மீது ரஷியா தனது தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது.

# கியூபாவில் ஹோட்டல் வெடிவிபத்து: பலியானோர் தொகை 43 ஆக உயர்வு!



ஹவானா, மே 12

கியூபா தலைநகர் ஹவானாவிலுள்ள சொகுசு ஹோட்டலொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 43ஆக உயர்ந்துள்ளது. பலியானவர்களில் பெரும்பாலானோர் ஹோட்டல் தொழிலாளர்கள் என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரண்டு ஆண்டு கொரோனா தொற்று இடைவேளைக்குப் பிறகு ஹவானாவிலுள்ள சொகுசு ஹோட்டல் சரடோகா மீண்டும் திறக்கப்படவிருந்தது.

இந்த நிலையில் ஹோட்டல் வெடிவிபத்துக்குள்ளானது. ஹோட்டலில் வெடிவிபத்தில் இடிபாடுகளில் சிக்கி 40 பேர் பலியானதாகவும், 18க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியானது.

இந்நிலையில், இடிபாடுகளில் சிக்கி பலியானவர்களின் மேலும் சில சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. அதையடுத்து, விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு ஸ்பானிஷ் சுற்றுலாப் பயணி உள்பட 43-ஆக உயர்ந்துள்ளது. பலியானவர்களில் பெரும்பாலானோர் ஹோட்டல் தொழிலாளர்கள். பலத்த காயங்களுடன் மீட்கப்பட்ட 17 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இடிபாடுகளில் சிக்கியிருப்பவர்களைத் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மூன்று ஹோட்டல் தொழிலாளர்கள் காணவில்லை என்றும், அவர்கள் இடிபாடுகளுக்கு அடியில் புதைந்திருக்கலாம் என கூறப்படுகிறது.

குறைந்தது ஒரு ஸ்பானிஷ் சுற்றுலாப் பயணி உட்பட ஒட்டு மொத்த இறப்பு எண்ணிக்கை 43 ஆக உயர்ந்துள்ளதாக சுகாதார அமைச்சகம் நேற்று முன்தினம் மாலை தெரிவித்துள்ளது.

ஹோட்டல் வெடிவிபத்தால் அருகில் இருந்த 38 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 95 பேரை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டியுள்ளதாகவும், அருகில் உள்ள கட்டடங்களில் ஒன்று முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளாதல் இடிக்க வேண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

96 அறைகளைக் கொண்ட அந்த ஹோட்டலில் ஏற்பட்ட இந்த விபத்து எரிவாயு கசிவினால் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

ஈழநாடு





# பியாங்காவிடம் வீழந்தார் பிரிட்டனின் எம்மா ரடுகானு

ரோம், மே 12

இத்தாலியன் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் பிரிட்டனின் பிரபல வீராங்கனையான எம்மா ரடுகானு முதல் சுற்றிலேயே வெளியேறினார்.

இத்தாலியன் ஓப்பன் ரென்னிஸ் தொடர் கடந்த 7ஆம் திகதி இத்தாலியின் ரோமில் ஆரம்பமானது.

இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் கிராண்ட்ஸ்லம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பனில் சம்பியன் பட்டம் வென்ற பிரிட்டனின் எம்மா ரடுகானு கனடாவின் பியாங்கா அன்ட்ரீஷூவை எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியில், பியாங்கா 6-2, 2-1 என்ற கணக்கில் பியாங்கா இலகுவாக வெற்றிபெற்றார். (ஐ)

# டெஸ்ட் தொடருக்கு பதில் ஒருநாள், ரி-20 தொடர்கள்!



கேப்டவுன், மே 12

கொரோனோவால் ஒத்திவைக்கப்பட்ட தென்னாபிரிக்கா அவுஸ்திரேலியா இடையேயான டெஸ்ட் தொடருக்குப் பதிலாக ஒருநாள் மற்றும் இருபது - 20 தொடராக மாற்றப்பட்டுள்ளது.

2021இல் நடக்க வேண்டிய தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலியா இடையேயான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்குப் பதிலாக 5 ஒருநாள் மற்றும் 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடர்களாக மறாற்ப்பட்டுள்ளன.

2023 ஒருநாள் உலகக்கிண்ணத்துக்கு தயாராகும் விதத்தில் இந்தப் போட்டிகளை மாற்றி அமைத்ததாக தென்னாபிரிக்கா கூறியுள்ளது. (ஐ)

# ஐ. பி. எல்லின் இறுதி சுற்றுக்கு முதல் அணியாக குஜராத் தகுதி!

புனே, மே 12

லக்னோ அணியை 62 ஓட்டங்களால் வீழ்த்திய குஜராத் ரைட்டன்ஸ் அணி இறுதிச் சுற்றுக்கு முதல் அணியாக முன்னேறியுள்ளது.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு புனேயில் நடந்த போட்டியில் குஜராத் ரைட்டன்ஸ், லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் அணிகள் மோதின.

துடுப்பாட்டத்துக்கு சாதகமில்லாத ஆடுகளத்தில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணி 145 ஓட்டங்களை லக்னோ அணிக்கு வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இந்த இலக்கைத் துரத்திய லக்னோ அணி 13.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழநது 82 ஓட்டங்களுக்கு சுருண்டது.

லக்னோ சார்பாக மூன்று வீரர்கள் மாத்திரமே இரு இலக்க ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றனர். அந்த அணிக்காக ஆடிய தீபக் ஹூடா 27 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே அந்த அணி சார்பில் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டமாக அமைந்தது.

11ஆம் இலக்க வீரர் ஆவேஷ் கான் 2ஆவது அதிக பட்ச எண்ணிக்கையாக 12 ஓட்டங்களைப் பெற்றார். குயின்ரன் டி கொக் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

குஜராத் அணியின் பந்துவீச்சில் ரஷித் கான் 24 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் ரவி சிறீநிவாசன் சாய் கிஷோர் 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் யாஷ் தயாள் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முன்னதாகத் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணிக்கு ரிதிமான் சஹா (5), மத்தியூ வேட் (10), அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா (11) ஆகியோர் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க குஜராத் ரைட்டன்ஸ் 9.1 ஓவர்களில் 51 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

ஆனால், எஞ்சிய 65 பந்துகளில் 93 ஓட்டங்களைப் பெற்ற குஜராத் ரைட்டன்ஸ் ஓரளவு கௌரவமான நிலையை அடைந்தது.

ஷப்மான் கில் பொறுமையுடன் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களைப் பெற்றார்.



குஜராத் ரைட்டன்ஸ் இனிங்ஸில் ஒரே ஒரு சிக்ஸரை அடித்த டேவிட் மில்லர் 26 ஓட்டங்களையும் ராகுல் தெவாட்டியா ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

4ஆவது விக்கெட்டில் டேவிட் மில்லருடன் 52 ஓட்டங்களைப் பகிர்ந்த கில், பிரிக்கப்படாத 5ஆவது விக்கெட்டில் மேலும் 41 ஓட்டங்களைப் பகிர்ந்தார்.

பந்துவீச்சில் ஆவேஷ் கான் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். (ஐ)

# ஐ. சி. சியின் சிறந்த வீரர் கேஷவ் மகராஜ் தெரிவு



கேப்டவுன், மே 12

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) ஏப்ரல் மாதத்துக்கான சிறந்த வீரர்களின் பரிந்துரை பட்டியலை வெளியிட்டுள்ளது. தென்னாபிரிக்கா வீரர் கேசவ் மகாராஜ், இங்கிலாந்தின் சகலதுறை வீரர் சிமோன் ஹார்மர், ஓமானின் துடுப்பாட்ட வீரர் ஜதீந்தர் சிங் ஆகியோர் இடம்பிடித்தனர்.

இதேபோல் சிறந்த வீராங்கனைக்கான விருது பட்டியலில் அவுஸ்திரேலியா பெண்கள் அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீராங்கனையுமான அலிசா ஹீலி, இங்கிலாந்தின் சகலதுறை வீராங்கனை நடாலி ஸ்கிவர் மற்றும் உகாண்டாவின் சகலதுறை வீராங்கனை ஜேனட் எம்பாபாசி ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.

இந்நிலையில், ஏப்ரல் மாதத்துக்கான சிறந்த வீரர் விருதுக்கு தென்னாபிரிக்காவின் கேசவ் மகாராஜ் தேர்வு செய்யப்பட்டுள்ளார் என ஐசிசி அறிவித்துள்ளது. சொந்த மண்ணில் வங்காளதேசத்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2 போட்டிகளில் 16 விக்கெட் வீழ்த்தினார் கேசவ் மகாராஜ் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கைக்கு எதிரான டெஸ்ட்

# பங்களாதேஷ் அணியில் ஷகீப் அல் ஹறசன் இல்லை

டாக்கா, மே 12

பங்களாதே/க்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெறவுள்ள முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சகலதுறை வீரர் ஷகீப் அல் ஹசன் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஷகீப் அல் ஹசனின் கோவிட் - 19 பரிசோதனை அறிக்கை நேர்மறையாக இருந்ததன் காரணமாகவே முதலாவது டெஸ்ட் போட்டியில் அவர் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் முதலாவது போட்டி சட்டோகிராமில் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

மெஹிதி ஹசன் மிராஸ், தஸ்கின் அஹ்மத் ஆகிய இருவரும் உபாதைகளிலிருந்து மீளாததால் அவர்களும் டெஸ்ட் தொடரில் விளையாட மாட்டார்கள் என தெரிவிக்கப்பகின்றது.

இப்போது ஷகீப் அல் ஹசனும் அணியில் இடம் பெறாதது பங்களாதே/க்கு பேரிழப்பாக அமையும்.

பங்களாதேஷ் டெஸ்ட் குழாத்துடன் ஷகீப் அல் ஹசன் இணையவிருந்த நிலையில், அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்ப்பட்டது.

எனினும், ஷகீப் அல் ஹசனுக்குப் பதிலாக யாரையும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபை பெயரிடவில்லை. ஆனால், டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டபோது உபாதையிலிருந்த மெஹிதி ஹசன் மிராஸூக்கு பதிலாக மொசாடெக் ஹொசெய்னை தேர்வாளர்கள் தெரிவு செய்திருந்தனர்.



பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் கடந்த டிசம்பர் மாதம் கடைசியாக விளையாடிய ஷக்கிப் அல் ஹசன் அதன் பின்னர் தவறவிடும் 5ஆவது டெஸ்ட் இதுவாகும்.

தனிப்பட்ட காரணங்களுக்காக நியூசிலாந்துடனான டெஸ்ட் தொடரில் விளையாடாமல் இருந்த ஷக்கிப் அல் ஹசன், சுகவீனம் காரணமாக தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் தொடரிலும் விளையாடவில்லை.

ஒரு வருட தடைக்குப் பின்னர் அணிக்கு திரும்பிய ஷகீப் அல் ஹசன், 3 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரமே ஷகீப் அல் ஹசன் விளையாடியுள்ளார். (ஐ)

# அவன்கார்ட் நிறுவனத்தின் அலுவலகம் மீது தாக்குதல்

கொழும்பு, மே 12
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நெருக்கமான வர்த்தகரான நிஷங்க சேனாதிபதியின் அவன்கார்ட் நிறுவனத்துக்கு சொந்தமான ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள பிரதான அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது.

காலிமுகத் திடலில் போராட்டம் நடத்தி வரும் போராட்டகாரர்களுக்கு ஆதரவான மக்கள் இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

தாக்குதலில் அலுவலகத்தின் கண்ணாடிகள் உடைந்து சேதமாகியுள்ளன. அத்துடன் அலுவலகத்துக்குள் இருந்த சில உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன. (அ)

# அரசியல் நடவடிக்கைகளுக்கு இனி தனியார் பஸ்கள் வழங்கப்படாது

கொழும்பு, மே 12
அரசியல் நடவடிக்கைகளுக்காக தனியார் பஸ்களை வழங்குவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் அலரிமாளிகையில் நடத்தப்படும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வாடகை அடிப்படையிலும் சிலர் தனிப் பட்ட இலாப நோக்கத்துக்காக வும் இவ்வாறு பஸ்களை வழங்கி இருந்ததாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் அரசியல் நடவடிக்கைகளுக்காக தனியார் பஸ்களை வழங்குவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் பிரதமர் மஹிந்தவின் ஆதரவாளர்களால் காலிமுகத்திடலில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 20இற்கும் மேற்பட்ட தனியார் பஸ்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 - 10 - 1942



மறைவு
10 - 05 - 2022

### சின்னப்பு பத்மநாதன்

*(ஓய்வுபெற்ற சாரதி - யாழ்.பல்கலைக்கழகம்)*

நல்லூர் அரசடியை பிறப்பிடமாகவும் 82/7, பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு பத்மநாதன் நேற்று (10.05.2022) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், கமலாதேவியின் பாசமிகு கணவரும், தனுஜா (ஆசிரியை - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) அவர்களின் பாசமிகு தந்தையும், டிக்சன் அவர்களின் பெரிய தந்தையும், விமலனின் (ஆதித்யா பிறிண்டேர்ஸ்) பாசமிகு மாமனாரும் ஆதித்யா, அபிசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் வாமதேவியின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2022) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.82/7,*
*பருத்தித்துறை வீதி,*
*3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

தகவல் :
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :
**0777159730, 0212215306**

# ஏழரை மணி நேர மின்வெட்டு மீண்டும் நடைமுறைக்கு வரும்

## டீசல் இல்லாதமையால் இந்த நிலை

**கொழும்பு, மே 12**
**நாட்டில் எரிபொருள் தீர்ந்து வருவதனால் மின்வெட்டை நீடிக்க வேண்டியுள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.**

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதையடுத்து சுமார் 7 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் வரை மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என அந்த சங்கத்தின் செயலாளர் எரங்க குடா ஹேவா தெரிவித்தார்.

அதற்கமைய பகல் வேளைகளில் 5 மணித்தியாலங்களும், இரவில் இரண்டரை மணி நேரமும் மின்தடை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், எரிபொருள் விநியோகம் முற்றிலும் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகவும், மே 7ஆம் திகதியுடன் டீசல் கையிருப்பில் இல்லையெனவும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# தந்தையை கொன்ற மகன்!

## இங்கிரியவில் சம்பவம்

கொழும்பு, மே 12
இங்கிரிய, உறுகல பிரதேசத்தில் வீடொன்றினுள் மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்டுள்ள இரும்பு கம்பியொன்றினால் தாக்கி, தந்தையை கொலை செய்த சம்பவத்துக்காக மூத்த மகனை இங்கிரிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரத்தினபுரி, பாணந்துறையில் தனியார் பேருந்தில் சாரதியாகப் பணிபுரிந்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான தேவகே பிரியல் லலிந்ர கருணாதிலக (வயது-50) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் குடிபோதையில் தாய் மீதும் பிள்ளைகள் மீதும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்துள்ளமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவத்தின் பின்னர் சந்தேகநபர் வீட்டை விட்டுத் தப்பிச் சென்றதாகவும், இதுபற்றி தனது தாயாரிடம் கூறியதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

படுகாயமடைந்த நபர் “1990 சுவசெரிய” அம்புலன்ஸ் மூலம் இங்கிரிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கணனிகள் எரிந்து நாசமாகிவிட்டன சூம் கூட்டத்தில் பங்கேற்க முடியாது

கொழும்பு, மே12
எமது கணினிகள் யாவற்றையும் அண்மையில் ஆத்திரம் அடைந்த குழுவினர் எரித்து நாசமாக்கியதனால் எம்மால் சூம் ஊடாக பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவின் கூட்டத்தில் பங்கேற்க முடியாது என்று பல கட்சிகளின் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

பாராளுமன்ற சபாநாயகர் மகிந்த யாப்பாவிடம் பல கட்சிகளின் தலைவர்கள் முறையிட்ட போது, கணினிகள் மற்றும் மடிக்கணினிகள் தீயில் எரிந்து நாசமாகியுள்ளதால், பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுவின் சூம் கூட்டத்தில் பங்கேற்க முடியாது என்று தெரிவித்துள்ளனர்.

போராட்டக்காரர்கள் வீடுகளைத் தாக்கி தீ வைத்ததால் கணினிகள் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

கட்சித் தலைவர்கள் பாராளுமன்றத்தில் பங்கேற்க முடியாததால் பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு கூட்டத்தை சூம் தொழில்நுட்பம் ஊடாக நடத்த முடிவு செய்யப்பட்டிருந் தது குறிப்பிடத் தக்கது.(அ)

# ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின் ஏழரை மணிநேர மின்வெட்டு

கொழும்பு, மே 12
நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் மின்சாரத் தேவை அதிகரிக்கும் என்பதால் தற்போதைய மின்வெட்டு ஏழரை மணித்தியாலங்களாக நீடிக்கப்படும் அபாயம் உள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் பங்கேற்ற இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் எரங்க குடா ஹேவா இந்தத் தகவலைத் தெரிவித்தார். (ஐ)

# தேசபந்து தென்னக்கோன் மீது தாக்குதல் கைதாகிய இருவரும் விளக்கமறியலில்

கொழும்பு, மே 12
சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த இருவரையும் இன்று வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரை நேற்று முன்தினம் கைது செய்திருந்தனர். (அ)

# அசம்பாவிதங்கள் இல்லையெனில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும்

## பாதுகாப்புச் செயலாளர் அறிவிப்பு

கொழும்பு, மே 12
அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறாத பட்சத்தில் இன்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

எனவே, நாட்டில் நிலவரம் முழுமையாக கண்காணிக்கப்பட்டு அதன் அடிப்படையில் பொலிஸ் ஊரடங்கு சட்டத்தை நீக்குவதா? அல்லது நீடிப்பதா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் தேவையேற்பட்டால் மீண்டும் ஊரடங்கை அமுல்படுத்த வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## இவ்வாரத்துக்குள்...

வருமாறு:

இன்று எமது நாடு அதன் வரலாற்றில் மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்த நிகழ்வுக்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் எதிர்கொண்ட சிரமங்களினால் சமூக மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மையை உருவாக்கியது.

இப்பிரச்னைகளுக்கு தீர்வாக, பாராளுமன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி, புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான பொதுவான பிரேரணை பல்வேறு கட்சிகளினால் முன்வைக்கப்பட்டது. கடந்த காலங்களில் இது தொடர்பாக பல்வேறு கட்சிகள் மற்றும் குழுக்களின் தலைவர்களுடன் பலமுறை கலந்துரையாடியுள்ளேன். நானும் அந்த ஆலோசனையை ஏற்று இந்த தீர்வுக்கு களம் அமைக்க சில கடினமான முடிவுகளை எடுத்தேன்.

கடந்த அமைச்சரவையை நியமிக்கும் போது அப்போது இருந்த பெருமளவிலான சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் ராஜபக்ஷக்கள் எவரும் இல்லாத இளம் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட புதிய அமைச்சரவையும் நியமிக்கப்பட்டது. அத்துடன், பிரதமர் பதவி விலகியதுடன், முழு அமைச்சரவையையும் கலைத்துவிட்டு, புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவைக்கு இடமளிக்க உடன்பாடு எட்டப்பட்டது.

ஆனால், மே மாதம் 09ஆம் திகதி திங்கட்கிழமை காலை, நீங்கள் அனைவரும் அறிந்தபடி, மிகவும் துரதிர்ஷ்டவசமான சூழ்நிலை ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து மிகக் குறுகிய காலத்தில் நாடளாவிய ரீதியில் கலவரம் வெடித்தது. ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு முப்படைகள் குவிக்கப்படுவதற்கு முன்னரே இந்தச் செயற்பாடு நாடு முழுவதும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் இடம்பெற்றது. சில மணி நேரங்களில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட சுமார் ஒன்பது பேர் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். அதேபோன்று சுமார் 300 பேர் வரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஏராளமான வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. நாடு முழுவதும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளுக்கு காரணமான முதல் சம்பவத்தை நான் பாரபட்சமின்றி வன்மையாகக் கண்டிக்கிறேன். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் அதைத் தொடர்ந்து நடந்த தொடர் கொலைகள், தாக்குதல்கள், மிரட்டல்கள், சொத்துக்கள் அழித்தல் உள்ளிட்ட இந்த கொடூரமான சம்பவங்களை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

இச்சம்பவம் இடம்பெற்ற தருணத்திலிருந்து பாதுகாப்புச் செயலாளர், முப்படைகளின் பிரதானிகள், பொலிஸ் மா அதிபர், புலனாய்வுப் பிரிவின் பிரதானிகள் மற்றும் பாதுகாப்புச் சபையின் பங்களிப்புடன் நாட்டில் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறேன்.

இந்த நிலையில் அனைத்து குடிமக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதே அரசின் முதன்மையான பொறுப்பு.

எனவே, கலவரக்காரர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறு முப்படையினர் மற்றும் காவல்துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தை திட்டமிட்டு, ஆதரித்த மற்றும் விளம்பரப்படுத்திய அனைவருக்கும் எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே இவ்வாறான நாசகார நடவடிக்கைகளில் இருந்து விலகிக்கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். இந்த நாட்டின் பொறுப்புள்ள குடிமக்கள் இதுவரை நடந்துள்ள உயிர் மற்றும் உடைமைச் சேதங்களை அவதானித்து, தொடர்ந்து வெறுப்பு உணர்வை பரப்பும் குழுக்களைக் கண்டிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படும் அதேவேளையில், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் இணைந்து செயற்படுவேன்.

தற்போதைய சூழ்நிலையை கட்டுப்படுத்தவும்இ நாடு அராஜகத்திற்கு ஆளாவதை தடுக்கவும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள அரசாங்கத்தின் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கவும் புதிய அரசாங்கத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளேன். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைப் பெறக்கூடிய மற்றும் நாட்டு மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் ஒரு பிரதமரையும் அமைச்சரவையையும் நியமிக்க இந்த வாரம் நான் நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

அதன்பிறகு, 19ஆவது திருத்தச் சட்டத்தின் உள்ளடக்கங்களை மீண்டும் நிறைவேற்றும் வகையில், பாராளுமன்றத்துக்கு அதிக அதிகாரம் கிடைக்கும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறேன்.

புதிய அரசாங்கத்தின் புதிய பிரதமருக்கு, புதிய வேலைத்திட்டத்தை முன்வைத்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். ஜனாதிபதி முறைமையை நீக்குமாறு பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புதிய அரசாங்கம் நாட்டை ஸ்திரப்படுத்தியதன் பின்னர் அனைவருடனும் கலந்துரையாடி அதனை நோக்கிச் செயற்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும். இந்த இக்கட்டான தருணத்தில் நாடு வீழ்ச்சியடையாமல், மக்களின் உயிரையும், அவர்களின் உடைமைகளையும் பாதுகாப்பதற்கும், மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அனைத்தையும் வழங்குவதற்கும் அரச செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கவும் எனக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, இந்த சந்தர்ப்பத்தில் நாட்டு மக்கள் அனைவரையும் அமைதியாகவும், விவேகமாகவும் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன்-என்றார். (அ)

## ஐக்கிய மக்கள்...

தாஸவிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தனது எதிர்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் தற்போது சுயாதீனமாக பாராளுமன்றில் செயற்படவுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று மாலை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் மிகவும் சூடுபிடித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் அராஜக நிலையை போக்குவதற்கு கட்சி என்ற ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் பலரும் கட்சித் தலைவரிடம் யோசனை தெரிவித்துள்ளனர்.

எனினும் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடமிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இதேவேளை, இந்த காரசாரமான விவாதங்களுக்கு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ கட்சியை விட்டு விலகுவதாக கட்சித் தலைவரிடம் தெரிவித்தார் எனக் கூறப்பட்டது. (அ)

## தேவையற்று...

படையினர் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என்றும் இராணுவத் தளபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

”நாட்டையும், மக்களையும், பொதுச் சொத்துக்களையும் பாதுகாக்கும் இராணுவத்தின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்குங்கள். வீடுகளில் இருங்கள். தேவையற்ற வகையில் வெளியில் வரவேண்டாம்” என்றும் இராணுவத் தளபதி ஊடகங்களிடம் நேற்று தெரிவித்தார். (அ)

## புதிய...

பய ராஜபக்ஷ ரணிலுக்கு பிரதமர் பதவியை வழங்குவதற்கு முடிவு செய்துள்ளார் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்துள்ளன.

ஆளும் தரப்பின் மீதான தெற்கு மக்களின் சீற்றம் எல்லை கடந்த நிலையில்-முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட ஆளும் தரப்பு எம்.பிக்களின் வீடுகள், சொத்துக்கள் மக்களால் எரியூட்டபட்ட நிலையில் மக்களின் கடுமையான கோபத்தில் இருந்து விடுபடும் எண்ணத்துடன் ஜனாதிபதி இந்த முடிவை எடுத்திருக்கிறார் என நம்பப்படுகின்றது.

ஆளும் தரப்பினர் எவருமே இப்போது வெளியே நடமாட முடியாத இக்கட்டான நிலைமை நாட்டில் ஏற்பட்டுள்ளமையால் ரணிலைப் பிரதமராக நியமிப்பதன் மூலம் இந்த ஆபத்து நிலையில் இருந்து மீளலாம் என ஆளும் தரப்பு நம்புவதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகி, மூன்று நாட்கள் கடக்கவுள்ள நிலையிலும், புதிய பிரதமரின் கீழ் ஆட்சி அமையவில்லை. இந்நிலைமை நீடித்தால் இலங்கை பொருளாதாரம் மேலும் வங்குரோத்தடையும். அதேபோல இராணுவ பிரசன்னமும் அதிகரிக்கப்பட்டால் சர்வதேச உதவிகள் தடைப்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

பிரதமர் பதவியை ஏற்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் சஜித் பிரேமதாஸவுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பை ஏற்பதற்கு, ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்ற நிபந்தனை சஜித் தரப்பில் இருந்து விடுக்கப்பட்டது. ஜே.வி.பியும் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு பிரதமர் பதவியை ஏற்குமாறு ரணிலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

19 ஆவது திருத்தத்தை மீளச் செயற்படுத்தும் நிபந்தனையுடன் - நாட்டு நிலையைக் கருதி, பதவியை ஏற்பதற்கு ரணில் இதன்போது சம்மதம் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அரசியலில் குள்ளநரியாகவே ரணில் பார்க்கப்படுகின்றார். 42 ஆசனங்களை வைத்துக்கொண்டு ஆட்சியைப்பிடித்ததுடன், அரசமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தினார். எனவேதான் தற்போது ஒரு ஆசனத்தை வைத்துக்கொண்டு பிரதமராகின்றார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி இரண்டாக பிளவுபடும் என தெரியவருகின்றது.

அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ சுயாதீனமாக செயற்படும் முடிவை அறிவித்துள்ளார். அவரும் ரணில் பக்கம் சாய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## இராணுவம்...

சின் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் தெரிவித்திருக்கிறார்.

“இன்னும் பரந்த அளவில், கடந்த சில நாட்களாக இலங்கையில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து நாங்கள் மிகவும் கவலையடைந்துள்ளோம். நான் முன்பு கூறியது போல் அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறையை நாங்கள் கண்டிக்கிறோம். வன்முறைச் செயல்களைத் தூண்டும் மற்றும் ஈடுபடும் எவரையும் முழு விசாரணைக்குட்படுத்திக் கைது செய்து, வழக்குத் தொடருமாறு கேட்டுக்கொள்கிறோம். நான் முன்பு கூறியது போல், துருப்புக்களின் நிலைப்பாட்டை நாங்கள் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம், அது எங்களுக்குக் கவலை அளிக்கிறது, மேலும் பிரதமர் ராஜினாமா செய்த பின்னர் இலங்கையில் நிலவும் அரசியல் முன்னேற்றங்கள் மற்றும் நிலைமைகளை நாங்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம்.”

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## ஊரடங்குச்...

அத்துடன், இன்று பிற்பகல் 2 மணிக்கு மீளவும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் மறுநாள் வெள்ளிக்கிழமை 6 மணிக்கு நீக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களை அடுத்து மே 9ஆம் திகதி திங்கட்கிழமை நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிவரை நீடிக்கப்பட்டது.

இந்த நிலையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை இன்று காலை 7 மணிக்கு நீக்கப்படும் என்று நேற்றிரவு ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை, ஊரடங்குச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று பொலிஸ் அறிவித்துள்ளது.

வன்முறையில் ஈடுபடவேண்டாம் என்றும், வீதிகளில் தேவையில்லாமல் குழுக்களாக கூட வேண்டாம் என்றும், கொள்ளை அல்லது நாசகார செயல்களில் ஈடுபட்டால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சுட்டுக் கொல்லப்படலாம் என்றும் பொலிஸ் தெரிவித்துள்ளது. (அ)

## மக்களின்...

இளையோரை நினைவுகூர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ், அந்நாட்டின் அரசியல் தலைவர்கள், இந்த மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும் என வலியுறுத்தினார்.

இலங்கையில் வன்முறைக்கு இடமளிக்காத, அமைதியான மனநிலை பேணிக்காக்கப்படவேண்டும் என்று விண்ணப்பிக்கும் அனைத்து மதத் தலைவர்களோடு தானும் இணைவதாகத் தெரிவித்துள்ள திருத்தந்தை, நாட்டு மக்களின் உண்மையான ஏக்கங்கள் செவிமடுக்கப்படவும், மனித உரிமைகள் மற்றும், பொதுமக்களின் சுதந்திரங்கள் முழுமையாக மதிக்கப்படுவதற்கு உறுதியளிக்கப்படவும் வேண்டும் என அதற்குப் பொறுப்பான தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பதாகத் தெரிவித்தார். (அ)

## கொழும்பு...

லில் உள்ள நிலையில் வீதிகளில் செல்லும் மக்களிடம் அடையாள அட்டைகளை பார்வையிடும் இராணுவத்தினர், மக்கள் வெளியில் வந்தமைக்கான காரணத்தையும் கேட்டறிகின்றனர்.

அதேவேளை, மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்களில் வருபவர்களை இராணுவத்தினர் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். வாகனங்களையும் சோதனையிடுகின்றனர்.

இந்நிலையில், நேற்று காலை முதல் கொழும்பு நகரில் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (அ)

## பாதுகாப்பு...

லப்பட்டார். நாட்டின் நிலைமை வழமைக்குத் திரும்பியதும் அவர் விரும்பும் இடத்துக்கு மாற்றப்படுவார் என்று பாதுகாப்பு செயலர் குறிப்பிட்டார்.

மே 9 ஆம் திகதிக்கு பின்னர் கட்சி அரசியல் பாகுபாடின்றி காழ்ப்புணர்ச்சி மற்றும் தீ வைப்பு போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்பு செயலாளர் கூறினார்.

சிசிரிவி காட்சிகள் மற்றும் காணொளிக் காட்சிகளை ஆய்வு செய்த பின் பொறுப்பான நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்கள் ஊரடங்கு உத்தரவையும் மீறிச் செயல்படுவதால் பாதுகாப்புப் படையினருக்கு துப்பாக்கிச் சூடு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# கோட்டாபய பதவி துறந்தால் பிரதமராவதற்கு சஜித் தயார்

### அறிவித்தது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மே. 12

"ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ பதவி விலகினால், பிரதமர் பத வியை ஏற்பதற்கு சஜித் பிரேமதாஸ தயாராகவே இருக்கின்றார்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உப தலைவரான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று அறிவித்தார்.

விசேட செய்தியாளர் மாநாடொன்றை நடத் தியே அவர் இந்த அறி விப்பை விடுத்துள்ளார்.

"சவால்களுக்கு முகங் கொடுத்து நாட்டை மீட்பதற்காக பிரதமர் பத வியை ஏற்பதற்கு சஜித் பிரேமதாஸ தயார். எனி னும், இந்த ஜனாதிபதியின்கீழ் பிரதமர் பதவியை ஏற்க முடியாது. அவர் பதவி விலகவேண் டும். இந்த விடயத்தில் எமது கட்சி உறுதியாக நிற்கின்றது.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத் துக்கு வரும். பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது." - என்றும் கிரியெல்ல குறிப்பிட்டார். (அ)

# மஹிந்தவை பாதுகாப்பது முப்படையினரின் கடமை

### கூறுகிறார் இராணுவத் தளபதி



கொழும்பு, மே. 12

மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவரான முன்னாள் பிரதமரை பாதுகாப்பது அரசமைப்பின்படி முப்படையினருக்கு உரித்தாக்கப் பட்டுள்ள கடமையாகும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை திருகோணமலைக்கு அழைத்துச் சென்றதாக பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ள நிலையில், சவேந்திர சில்வா இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் மக்களின் பாதுகாப்புக் காகவே இராணுவத்தினர் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர் என்றும் எனவே அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் வன்முறைகள் பாரதூரமானால் அவற்றை கட்டுப்படுத்தும் அதிகாரம் இராணுவத்துக்கு வழங்கப்படுமே தவிர, அது ஒருபோதும் இராணுவ ஆட்சியாக மாறாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)







# பிரதமர், அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்து அதன் பின்னர் ஜனாதிபதி பதவி விலக வேண்டும்

### சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், மே 12

ஜனாதிபதி உடனடியாக பிரதமர் மற்றும் அமைச்சரவை பதவிப் பிரமாணம் செய்து, அதன் பின்னர் பதவி விலக வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டபூர்வமான தன்மையை இழந்துவிட்டார், அவர் பதவி விலக வேண்டும் எனவும் சுமந்திரன் குறிப்பிட்டார்

இந்த விடயம் குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர்-

ஒரு மாதத்துக்கும் மேலாக அவரை பதவி விலகுமாறு நாடு முழுவதும் கேட்டுக்கொண்டிருக்கிறது. அதற்குப் பதிலாக, அவர் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்துள்ளார். அவர் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தும்போது, அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தொடர் 10 நாட்களுக்கு மேல் இருந்தால், பாராளுமன்றத்தைக் கூட்டி மற்றொரு பிரகடனத்தையும் செய்யவேண்டும் என்று அரசமைப்புச் சட்டம் 155 (7) கூறுகிறது. அவர் செய்யவில்லை.

ஜனாதிபதி அவ்வாறானதொரு பிரகடனத்தை மேற்கொள்ளாத காரணத்தினால் பாராளுமன்றத்தை கூட்டுமாறு சபாநாயகர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தகைய சூழ்நிலையில் பிரதமர் இல்லாமலும் பாராளுமன்றத்தை கூட்ட முடியும்.

எனினும், பிரதமர் இராஜினாமா செய்ததன் பின்னர், அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ளது. அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களும் தமது பதவிகளை விட்டுச் சென்றுள்ளனர். அதுவே அரசமைப்பு நிலைப்பாடு.

எனவே, ஜனாதிபதி உடனடியாக ஒருவரை பிரதமராக நியமித்து அமைச்சரவையில் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும், இல்லாவிட்டால் அனைத்து ஆட்சி அதிகாரங்களும் ஜனாதிபதியிடம் இருக்காது.

ஜனாதிபதி சட்டபூர்வமான தன்மையை இழந்துவிட்டார், அவர் பதவி விலக வேண்டும்.

எனவே, ஜனாதிபதி உடனடியாக பிரதமர் மற்றும் அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்து, அதன் பின்னர் உடனடியாக பதவி விலக வேண்டும்-என்றார். (அ)

# படைகளை இலங்கைக்கு அனுப்பமாட்டாது இந்தியா

### தெளிவுபடுத்தியது தூதரகம்

கொழும்பு, மே. 12

இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்பும் எண்ணம் தமக்கு இல்லை என் றும், இது தொடர்பாக பல்வேறு ஊட கங்களில் வெளியாகும் செய்திகளை நிபந்தனையின்றி நிராகரிப்பதாகவும் இலங்கைக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியத் தூதரகம் தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் ஊடாக இதனை தெரிவித்துள்ளது.

பல்வேறு கட்சிகள், குழுக்கள்மற்றும் தனிநபர்களால் வெளியிடப்படும் அறிக் கைகள் இந்திய அரசின் நிலைப்பாட்டு டன் ஒத்துப்போவதில்லை என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் தற் போது நிலவும் அமைதியின்மையைத் தணிக்க இந்தியப் படையினர் களமிறங்க வேண்டும் என பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவரான சுப்பிரமணியன் சுவாமி நேற்று முன்தினம் ருவிட்டர் பதிவொன்றை இட்டிருந்தார். (அ)

# 6 மாதங்களுக்கு ஆட்சியை பொறுப்பேற்பதற்கு தயார்!

### தேசிய மக்கள் சக்தி அதிரடி அறிவிப்பு

கொழும்பு, மே. 12

ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ பதவி விலகினால், இடைக்கால அரசின் பொறுப்பை ஆறு மாதங்களுக்கு ஏற்பதற்கு தயார் என அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி நேற்று அறிவித்துள்ளது.

இதற்காக பாராளுமன்றத்தில் உள்ள கட்சிகளின் ஆதரவையும் அது கோரியுள்ளது.

ஜனாதிபதி பதவி விலகியதும், சிலவேளை ஏனைய கட்சிகளின் பங்களிப்புடன் இடைக்கால அரசு அமைந்தால், அவ்வாறானதொரு ஆட்சி கட்டமைப்புக்கு எதிரணியில் இருந்து ஆதரவு வழங்குவதற்கும் தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இவ்விரு தேர்வுகளில் ஏதேனும் ஒரு வழியில் அமையும் இடைக்கால அரசி யல் கட்டாயம் நிறைவேற்றப்பட வேண் டிய முக்கிய சில யோசனைகளையும் தேசிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளது.

6 மாதங்களுக்கு பிறகு பொதுத்தேர் தலையும், அரசமைப்பு மறுசீரமைப்புக் கான சர்வஜன வாக்கெடுப்பையும் ஒரே தடவையும் நடத்துமாறும் பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு கண்டு, அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்து வதற்காக ஜே.வி.பியால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் வருமாறு:

01. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும்.

02. பிரதமர் பதவி விலகியுள்ளதால், சபாநாயகர் தற்காலிக பதில் ஜனாதி பதியாக செயற்படலாம்.

03. 06 மாதங்களுக்குள் மக்கள் ஆணையுடன் புதிய அரசு ஸ்தாபிக்கப் படல் வேண்டும். அதுவரை தற்காலிக அரசை அமைக்கலாம். அதற்காக இரு முன்மொழிவுகள் முன்மொழியப்பட்டுள் ளன.

அ) நிகழ்கால அரசியல் நெருக்கடி மற்றும் அராஜக நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டை புதிய வழியில்இட்டுச் செல்வதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ள தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது. எனவே, தேசிய மக்கள் சக்தி முதன்மை பொறுப்பினை வகித்து , பாராளுமன்றத்தின் ஊடாக தற்காலிக இடைக்கால அரசொன்றை எந்தவித மான தடையுமின்றி நியமித்து கொள்வதற்கான வாய்ப்பினை தேசிய மக்கள் சக்திக்கு வழங்குதல்.

ஆ) அவ்வாறு இல்லாவிட்டால், குறுகிய காலப் பகுதிக்காக நிகழ்கால நாடாளுமன்றத்தில் இடைக்கால அர சொன்றை நிறுவிக்கொள்ளுதல். தேசிய மக்கள் சக்தி அரசில் அங்கம் வகிக்காது. எதிரணியில் இருந்து ஆதரவு வழங்கும்.

04. மேற்படி இரண்டு தீர்வுகளில் ஏதேனும் ஒரு வழியில் நியமிக்கப்படு கின்ற தற்காலிகமான இடைக்கால அரசாங்கம் கீழ் காணும் பணிகளை ஈடேற்ற வேண்டும்.

i. ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துகின்ற மற்றும் நிகழ்கால ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மட்டுப்படுத்துகின்ற அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தத்தை உடனடியாக பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

ii. நிகழ்காலத்தில் மக்கள் எதிர் நோக்கியுள்ள கடுமையான பொருளா தார அழுத்தங்களை குறைப்பதற்கான அத்தியாவசிய நிவாரணங்களை வழங்கு வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படல் வேண்டும்.

iii. நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லா தொழிப்பதற்கான அரசியல் அமைப்பு திருத்தமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறை வேற்றிக்கொள்ளல் வேண்டும்.

iv. தற்காலிக அரசாங்கமொன்று நிறுவப்பட்டு 06 மாதக்காலப்பகுதிக்குள் புதிய ஆட்சியொன்றை நிறுவுவதற்கு ஏதுவாக அதற்கான பொதுத் தேர்தலையும் நிகழ்கால ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான அரசியலமைப்பு திருத் தத்தையும் உள்ளடக்கியதாக மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்படல் வேண்டும்.

v. தற்காலிக அரசாங்கத்தின் பணிகள் உடன்பட்ட வகையில் இடம்பெறுகின்ற னவா என்பதை கண்காணிப்பதற்கான கண்காணிப்பு சபையொன்று நியமிக்கப்படல் வேண்டும். அது நிகழ்கால மக்கள் போராட்டத்துடன் தொடர்புபட்டுள்ள தொழிற்சங்க பிரதிநிதிகளை உள்ளிட்ட போராட்டத்தின் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள், பல்வேறு தொழில் வாண்மை அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளில் பிரதிநிதிகளை உள்ளடக் கியதாக அமைதல் வேண்டும்.

மேற்படி யோசனைகள் சம்பந்தமாக எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சர்கார், பியார் பிறேமா காதல் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : ட டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

